சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, ஆடி.	பரல்
௨௯	ஆகஸ்டு, 1955.	௧௨

தமிழகத்தில் இந்திமொழி

பொதியிற் றென்றல் என்று தோன்றியதோ அன்றே தோன்றிய பழமையுடையது நம் தீந்தமிழ்; அம்மொழி தென்னவன் முச்சங்கத் தொட்டிலில் வளர்க்க வளர்ந்து நாடெங்கும் விளையாடியது; சேர சோழர்கள் பாண்டியரோடு துணைநின்று வடநாடுவரை வளம் பெற்றிருந்தது நம் செந்தமிழ்.

முடியுடை மூவேந்தர்களின் ஆட்சி நிலைகுலைந்தபின், வேற்று நாட்டினர் கைக்கு நம் தமிழகம் மாறியது. அம் மொழிபெயர் நாட்டு மன்னர்கள் தம் தம் மொழிகளை நம் தமிழகத்தில் திணித்து அரசியல் மொழியாக ஆக்கினர்; அதனால் தமிழ் மொழி வளர்ச்சி குன்றித் தாழ்ந்தது; மொழி வளர்ச்சி குறையவே அதன் தொடர்பான இசை கூத்துக்களும் சிற்பம் முதலிய நுண்கலைகளும் தேய்வனவாயின. தம் தாய்மொழியான தமிழ் கற்பதால் அரசியலில் மதிப்புக் கிட்டாதென அறிந்த நந்தமிழர், அரசியலுக்கு வந்த வேற்றுமொழிகளைக் கற்று அதில் பட்டங்கள் பலபெற்றுக் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைவரை அரசியல் அலுவல்களை மேற்கொள்ளலாயினர். இவற்றால் இங்குத் தமிழ்த் தரைதான் இருந்ததன்றித் தமிழ்மொழி தன் உருக்குலைந்தும், தம் நாட்டுப் பண்புகள் யாவும் திரிபுற்று வேற்றுப் பண்புகள் கலந்தும், தமிழகம் தன் தமிழ் நாகரிகத்தைக் கெடுத்துத் தொலைக்கலாயிற்று.

நம் தமிழகத்தை நவாபு ஆண்ட காலத்தில் தமிழிற் கலந்த உருதுச் சொற்களான **கிஸ்தி வசூல் வஜா கஜானா சிரஸ்தார் தாசில்தார்** *போன்ற பலவும் ஆங்கில ஆட்சி இருநூற்றாண்டுகள்வரை*

நிலைபெற்றிருந்தும் இன்னும் மாற்றமுடியவில்லை. அப்பால் ஆங்கிலேயர் வருமுன் வேற்றுமொழியினர் வந்தனர்; ஆண்டனர்; அவரவர்கள் மொழிகள் வளர்ந்தன; கலைகள் ஓங்கின; தமிழ்மொழி பகலவிளக்குப் பட்டாங்கு மூலையில் ஒடுங்கி ஒளி குன்றிற்று. ஆங்கிலேயர் வந்து நம் நாட்டை ஆண்டபின், நம் கருந்துரைகளும் வெண்துரைகளாக மாறினர்; அதைப் பற்றிக் கேட்க வேண்டா; காப்பிக் குடியும் ஊது புகையுமே சாலும்! அவர் ஆண்டதைவிட அவர் மொழி இன்னும் ஆள்கின்ற கொடுமை பெரிது! பெரிது!

ஆங்கிலேயர் நம்நாட்டை விட்டுவிட்டுப்போய் நம் நாடு விடுதலைபெற்று உரிமையாகிக் குடியரசு நாடாகத் திகழ்ந்து எட்டாண்டுகள் ஆயின. இன்னும் ஆங்கிலேயத்துக்கு இருக்கும் மதிப்புச் சிறிதும் குறையவில்லை. பி.ஏ. பட்டம் ஆங்கிலேயத்தில் பெற்ற ஒருவருக்கும் தமிழில் புலவர் (பண்டித) பட்டம் பெற்ற ஒருவருக்கும் அறிவுத்திறனை அளந்தால் தமிழ்க் கற்றவரின் அறிவே மிகுதியாக இருக்கும், தம் தாய்மொழி ஆதலால். ஆனால் அவர்கள் செய்கின்ற ஆசிரியத் தொழின்மைக்குத் தமிழைக் கற்ற குற்றத்திற்காக ஒருவருக்குத் திங்கள் ஊதியம் குறைவு. ஆங்கிலேயம் பயின்ற மற்றவர் மேன்மைக்காக ஊதியம் கூட ஒருபங்கு மிகுதி. இவ்வாறிருந்தால் தமிழை எதற்காகக் கற்பான்?

இவ்வாறு ஆங்கிலத்தின் இடமே மாற்றவொண்ணாத நிலையில்—ஆங்கிலேயனை மகன் இல்லாததொன்றன்றி அவன் மொழி இன்றும் நம்மை ஆட்சி செலுத்துகின்ற நிலையில்—நாளையும் செலுத்துகின்ற நிலையில்—தமிழ் அன்றும் இன்றும் ஒன்றே.

இஃதிவ்வாறாகப் போதாக்குறைக்கு வடநாட்டினின்றும் இந்தி தென்னாட்டின்மீதும் ஏனைய பல்வேறு மொழிகள் வழங்கும் நாடுகளிலும் படையெடுத்து வந்துள்ளது. ஆங்கிலேயம் இருக்கும் இடத்தில் தனக்குரிய இடனை - ஆளும் மொழியாக - வந்துகொண்டிருக்கின்றது; கரையைத் தகர்க்கும் நீரலைபோலச் சிறிது சிறிதாக ஆங்கிலேயம் இருக்கும் இடத்தினின்றும் அதை அகற்றிவிட்டுத் தான் மேலேறி ஊர்ந்து வருகின்றது. காட்டாக: புகைவண்டி நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள், மூறைமன்றங்கள் போன்ற இடங்களில் தலையில் ஏறிக் கொண்டிருக்கின்றது. அஞ்சல் அட்டை (Card) கூடு (Cover) முதலியவற்றினும் அது முதலிடம் பெற்று வருகின்றது. இன்றும் அம்மொழி, கல்லூரிகளிலும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பெற்று வருகின்றது; வடநாட்டுப் பொதுஅரசியலார், இந்திமொழி கற்

ளோர்க்குத்தான் உத்தியோகம் வழங்கப்படுமென்று அறிக்கைக ளும், சுற்றறிக்கைகளும், பிறவும் வெளியிட்டு வருகின்றனர். அவர்களை நுங்கள் நாட்டு இந்தி மொழியை எங்கள் நாட்டுக்கு முந்தி விடுகின்றீர்களேயென்று கேட்டால், நாங்கள் கட்டாயப் படுத்தவில்லையே என்று கூறி, ‘மெல்ல மெல்லப் பாயுந் தண்ணீர் கல்லும் உருகப் பாயும்’ என்னும் பழமொழியைக் கடைப் பிடித்து வாயாரச் சொல்லி மழுப்பிச் செயலில் கொணர்ந்து காட்டுகின்றனர். இவர்கள இந்தியை வலுவாக நடமாட விட வில்லையென்றால், அறிக்கைகள் விடுவானேன்? நம் தென்னாட் டுக்கு இரண்டாயிரம் இந்திப் புலவர்களை விடுப்பானேன்? ஆங் கிலங்கற்று இந்திமொழி கற்காத நம் தென்னாட்டிற் பிறந்த தில்லிச் சட்ட அவை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளாத வகையில் வடநாட்டு உறுப்பினர்கள் சட்ட அவைக் கூட்டத்தில் இந்தி மொழியில் முடிபுகளும், உரையாடல்களும் கிளத்துதல் என்ன காரணமெனக் கடாவுகின்றோம்? உருசிய நாட்டுக்குச் சென்ற நம் இந்திய நாட்டு முதலமைச்சர், அந்நாட்டுத் தலைவர் புல்கானின் வரவேற்புக்கு நன்றி கூறுங்கால் அவரறிந்த ஆங்கில மொழியில் அவர் அறியும்படி கூறாது இந்தி மொழியில் பேசிய தன் கருத்தென்ன? அவர் இந்தி அறிவாரா? இந்தியில் பேசுவது தான் மகிழ்ச்சியா? இந்நிலையை நேரு அறியாரா? அரசியல் நுட்பம் அறியாதவரா? இச்சென்னை ஆவடியில் கூடிய அனைத் திந்தியக் காங்கிரசு மாநாட்டில் வடநாட்டுத் தலைவர்கள் இந்தி மொழியில் பேசியது ஏன்? இவைகளைக் கேட்பின், பிரித் தாளும் கொள்கையுடையவர் தென்னாட்டார் என்பதா? அண் மையில் கூடிய சென்னைச் சட்ட அவை மேலவைக் கூட்டத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சு மணசாமி முதலியார் இது குறித்து வருந்திக் கூறியவை வெற்றுரவாரமா? அவர் கூறியவற்றை இதன் கீழே பொறித்துள் ளோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் இம் மொழிபற்றிய தம கருத்துரைகளைக் கூறியுள்ளனரே! அது தெரி யாத கூற்றா? அதனையும் ஈங்கே இதனடியிற் காட்டியுள்ளோம்.

ஆகவே, பொது அரசியலார் உடனடியாக எம் தமிழகத் தின்மீது கட்டாய இந்தியைத் திணிக்கும் வேலையைக் கைவிட்டு விட்டு, நம் தமிழ் மொழியை நம் தமிழகத்தில் ஆட்சிமொழி யாக ஆக்கி, நல்ல பெயரைத் தேடிக்கொள்ள வேண்டுகின்றோம்; தமிழ்மொழி ஒன்றே உலக முழுதும் ஆட்சி மொழியாகத் திகழத் தக்க இயற்கை வாய்ந்த மொழி யென்பதைக் கூற விழைகின்றோம்.

பேரறிஞர் ஏ. இலட்சுமணசாமி முதலியாரவர்கள் கருத்துரை :

4-8-55-இல் சென்னை மேல் சட்ட அவையில் கவர்னர் சொற்பொழிவின்மீது உரையாடல் நிகழ்ந்தது; அப்போது முதலியாரவர்கள் கூறியன :

“இந்திப் பிரச்சினையில் உறுதியானமுடிவு காணாவிடில் உறுதியாகக் கிளர்ச்சியும் குழப்பமும் ஏற்படும். ‘லோக் சபை’யில் ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்களும் இந்தியிலேயே பேசுகிறார்கள். இந்தி தெரியாத தமிழக அங்கத்தினர்கள் எதுவும் புரியாமல் திணறுகிறார்கள். சபை நடவடிக்கைகளில் முழுதும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களும் இந்தி கற்று ஆக வேண்டும். இந்தியைத் திணிக்க முயற்சிக்கவில்லையென்று பேச்சு மட்டும் இருக்கிறது. எப்படி நம்புவது? மத்திய அரசியலாரின் ஊழியத்திலிருக்க விரும்புகின்றவர், இந்தி அறிந்தவராக இருக்க வேண்டும் என்ற யோசனை குறித்துப் பல்கலைக்கழகக் குழு, தனது கருத்தைத் தெரிவிக்கும்படி உள்நாட்டிலாகா மீண்டும் வற்புறுத்தி யிருக்கிறது. அப்போது சென்னைக்கு வேலைக்கு அனுப்பப்படும் மத்திய அரசினர் ஊழியர்கள், தமிழ் அல்லது, வேறு தென்மொழி அறிந்தவராக இருக்க வேண்டுமென்று சென்னை மாநில அரசியலார் வற்புறுத்தினால் தவறென்ன? எம்மொழியையும் நாம் வெறுக்கவில்லை. சென்னைக் கல்லூரிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது. ஆனால் எம்மொழியும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதையே மறுக்கின்றோம்; மிகவும் எதிர்க்கின்றோம். அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதென்ன? உண்மையில் நடப்பதென்ன? அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவது முதன்மையா? அல்லது இந்தி கற்றுக் கொடுப்பது முதன்மையா? இரண்டாயிரம் இந்தி ஆசிரியர்களை இங்கு அனுப்புவதில் அவசர மென்ன? ஆங்கிலத்தைப்போல் இந்தியும் தென்னாட்டுக்கு அன்னிய மொழிதான். ஆகவே, இப் பிரச்சினையில் உறுதியான முடிவு காணவேண்டும். இன்றேல் கிளர்ச்சியும் குழப்பமுமே ஏற்படும். இந்நிலையில் நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதிற் பொருளேயில்லை. பெரிய செயல்களில் ஒற்றுமை, சிறிய செயல்களில் வேற்றுமை. ஆனால் அனைத்திலும் ஒன்றுபட்ட நிறைந்த மனப்பான்மை. இதுவே, இன்று நமக்குந் தேவை. பண்டித நேருவால்தான் இன்று நமக்குப் பெருமை; அவரையே கேட்கிறேன்; இந்தி நிலைமையில் நல்லபடி கவனம் செலுத்துங்கள்.”

இவ்வாறு கூறினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் பிறகு பேசுகையில் இந்தி மொழிபற்றிக் கூறியன :

“இந்திய அரசியல் கூட்டுக் குழு மறைமுகமாக இந்தியைப் புகுத்த முயலுவதாயும் அதன் வழியாகச் சிறந்த தென்னிந்திய

மக்களுக்கு அக் குழுவில் இடமில்லாது போய்விடுமென்றும், ஆதலால் இந்தியைக் கற்பிக்கும் மொழியாகவோ அல்லது அதை இந்திய அரசியல் கூட்டுக் குழுவின் தேர்வுமொழியாக ஆக்குவதையோ தாம் ஆதரிக்கவில்லை யென்றும், இதனால் இந்தி படிப்பதைத் தாம் ஆதரிக்கவில்லை யென்று கருதக்கூடா தென்றும் அதை விருப்பப் பாடமாக்கி அனைவரும் படிக்க வழி செய்யலா”

மென்றும் கூறினார்.

இவ் விருவரும் இரண்டு தனித்தனிப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள்; இருவரும் ஆங்கிலத்தில் கற்றுத்துறை போய பேரறிஞர்கள். இவ் விருவருள், முதலியார் ஆங்கிலத்தில் பேசுந் திறமையில் உலகப் பெருமை பெற்ற சீரியர். மற்றொருவர் ஆங்கிலத்தில் பெரும் பட்டம் பெற்று அத்துறையில் அறிவு நிரம்பிய நேரியர். இவர்களின் கூற்றுக்களைக் காய்தல் உவத்தலின்றி ஆய்ந்து அரசியலார், தமிழகங்கூறும் நலனுரைக்குச் செவி சாய்த்துக் கேட்டு நல்லன செய்ய முன்வருவார்களென நம்புகின்றோம்.

பெரியார் ஈ. வே. ரா. வின் கொடியெரிப்புப் போர்

மத்திய அரசியலார் நம் தென்னாட்டில் இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணித்துப் பாடமாக வைத்திருப்பது கூடாது என்பதைக் காட்டுதற்காகப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், நம் இந்திய நாட்டுக் கொடியை நெருப்பிட்டுக் கொளுத்துவதாக அறிக்கை வெளியிட்டிருந்தனர். அதைக் கொளுத்தும் நாளும் 1-8-55 என்று குறிப்பிட்டிருந்தார்.

பின்னர் நம் சென்னைமாநில முதலமைச்சர் தில்லி நகருக்குச் சென்றிருந்தபோது நம் இந்திய நாட்டு முதலமைச்சர் நேரு அவர்களைக் கண்டு உரையாடினராம். அப்போது இது பற்றிய கருத்துக்களைக் கூறினாராம். ‘அவ்வாறாயின் இனி இந்தியைக் கட்டாயப்படுத்த மாட்டாது’ என்று அறிக்கை விடுமாறு நேரு கூறியதாகவும், அதன் பின்னரே முதலமைச்சர் காமராசர் இந்தியைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டனராம். அதை வெளியிடுமுன் பெரியாரிடம் கொண்டு வந்து காட்டி இவ்வாறு வெளியிடலாமா? எனக் கேட்டனராம். பெரியார், சில திருத்தங்கள் சொல்லி அதன்படி இருந்தால் போதுமென்றனராம். அதன் பின்னரே கொடிக் கொளுத்துதல் போராட்டத்தை ஒத்திவைத்தனர்.

அதில் ‘இந்தி திணிக்கப்படாது என்ற உறுதியை நடைமுறையில் காணவேண்டுமென்று கூறி, இப் போராட்டத்தை ஒத்திவைக்கிறேன்’ என்று அறிக்கையில் விளக்கங் கூறினார். பின்னரே கொடியெரிப்புப் போர் நின்றது.

சேரர் மரபு

[வித்துவான், திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, எம். ஏ., மயிலம்.]

சேரர் தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒரு மரபினர். சேர சோழ பாண்டியர் என வேந்தரைக் கூறும்பொழுது முதலில் வைத்துக் கூறுவதனாலேயே அவர்களது தொன்மை உணரப் படும். சங்க காலத்துச் சேர மன்னர்களைப் பற்றி இலக்கியங் கொண்டு நாம ஓரளவுதான் உணரமுடிகிறது. மரபைப் பற்றி ஒன்றும் உணர இயலவில்லை. சேர நாட்டில் செருமான் என்ற ஒரு சிறு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் சேரமான் மரபினராதல் வேண்டும் என்கின்றனர் சிலர். இவர்கள் நாய ரினத்தில் ஓர் பிரிவினராவர். புலையர் என்ற ஒரு பிரிவினர் ஆங்குண்டு. அவர்கள், துரியோதனனுக்குப் போரில் துணை செய்ததனால் இழிநிலை யடைந்ததாகக் கூறுகின்றனர். நாயர் நாக மரபினர் எனக் கருதப்படுகின்றனர். ஆதலின் சேரரது மரபினை ஆய்வாம்.

சிங்களம், சாவகம் முதலியன நாக நாடுகள் எனக் குறிக்கப் படுகின்றன. புத்தர் தமது மதத்தினைப் பரப்பச் சிங்களத்துக்கு வந்தபோது ஆங்கிருந்த இயக்கர்கள் (Yakshas) அவரை எதிர்த்தனர். ஆதலின், இயக்கர்கள் வாழ்தற்கியலாதபடி புத்தர் மழையில்லாது செய்தார். பின்னர் அவர்களைக் கிரித்வீ பத்திற்கு (மலையாளத்திற்கு)ச் செல்லும்படி கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் சிங்களத்தை விட்டகன்றனர். நாகர்கள் புத்தரொடு உறவு கொண்டனர். புத்தரோடு வந்த இந்திரன் அவர்களிடம் இராஜாயதனவிருட்சத்தைத் தந்து சென்றான். நாகர்கள் அம் மரத்தினைப் போற்றி வளர்த்தனர்; புத்த சமயத் தைப் பின்பற்றினர்; இந்திர வணக்கத்தைக் கைக்கொண்டனர். அந்நாளிலிருந்து இலங்கை வரலாற்றில் நாகரும் மறைந்தனர். சிங்களத்தில் மகதர்கள் கங்கைச் சமவெளியிலிருந்து குடியேறிய தற்கு முன்பே இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் நாகர்கள் எனச் சிங்கள வரலாற்றாசிரியர் பார்க்கர் (Parker) பகர்கின்றார். நாகர்கள் முதன் முதலில் வாழ்ந்த இடம் இந்தியாவின் தென் கோடியே என்பர்.[1]

மலையாளப் பகுதி, மாலவல்லி, வனவாசியைச் சூழ்ந்த பகுதி நாக கண்டம் என வழங்கப்பட்டதுண்டு. மலையாள வாசிகளில் ஒவ்வொரு குடும்பத்தினரும் நாகத்தை வணங்கி

1. Ancient Ceylon by Parker.

வருவதும் இதனை வலியுறுத்தும் என்பர். கேரளம் பரசுராம ரால அமைக்கப்பட்டது எனக் கூறுகிறது அந்நாட்டு வரலாறு. பரசுராமர் கேரளத்தில் நம்பூதிரிப் பிராமணர்களைக் குடியேற்றியபோது நாகர்கள் அவர்களை எதிர்த்தனர். நாகர்களை அவர்களால் வெல்லமுடியவில்லை. பரசுராமர் அந்நாகர்களுக்கு நாட்டிலோர் பகுதியைத் தந்து சமாதானம் செய்துகொண்டார். நம்பூதிரிகள் நாக மகளிர்களை மணந்துகொண்டனர். ஆதலின், அமைதியாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பிராமணர்களே நாட்டை ஆண்டு வந்த காலத்து ஆட்சியில் மாறுபாடு ஏற்படவே ஆட்சி முறையினை மாற்றியமைத்தனர். அரசியலவையின் முதல்வர் நாகமரபினராயிருத்தல் வேண்டும். அவர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். ஏனையவர் பிராமணர்கள் மூன்று ஆண்டுகளுக் கொருமுறை தேர்ந்தெடுக்கபபடவேண்டும். முதல்வன் பன்னிரண்டாண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுதலின் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. அரசியலவையைச் சார்ந்த நாடுவாழிகள் (Raksha Purushas) ஐவரும் ஒரு கட்சியாக, நாட்டு மக்கள் ஒரு கட்சியினராக இருசாரார்க்கும் பூசல் எழுந்தது. கொங்கு நாட்டு மன்னனொருவன் இருசாராருக்கும் உதவி செய்து வந்தான். அவன் ஒருவருக்குதவி செய்வது பிறருக்குத் தெரியாதவாறு ஒழுகிவந்தான். இருகட்சியினரும் அயர்ந்து நின்றனர்; ஒற்றுமையாகவே வாழ எண்ணினர்; தங்களுக்கு ஓர் அரசனைப் பிற நாட்டிலிருந்து கொண்டுவரத் துணிந்தனர். போரில் தங்களுக்குதவி செய்த மன்னனையே நாடினா. அவனும் இணங்கினன். அவன் பாணவர்மன் உதியன் சேரலாதன் எனப் படுவான்; அவன்கேரள நாட்டு மன்னனாக ஆனன். அவன் சேர நாடு ஆண்ட மகாபலியின் மரபில் வந்தவனாதலின் பாணவர்மன் எனப்பட்டான். பிராமணர்களது ஆட்சியில் அம்மரபு அரசிழந்திருந்தது; மீண்டும் வீறுகொண்டெழுந்தது; இச் சேரலாதன் புறநானூற்றில் குறிக்கப்படும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்பர். புறநானூற்று மூன்றும் செய்யுள் குறிக்கும் ஐவரையும் நூற்றுவரையும் நாடுவாழிகளாகவும் குடிமக்களாகவும் கொள்ளின் அச்செய்யுள் பாரதப் போரினைக் குறிப்பதாகக் கொண்டு இடர்ப்படவேண்டியதில்லை. உதியன் சேரமன்னனாக ஆனது கலி 2988-ஆம் ஆண்டு என்பர். இவன் காலத்து வஞ்சிமா நகர் என்பது மகோதயபுரம் எனத் தன் பெயரால் வழங்கியது. இவ்வரலாறு கேரள சரிததிரம் கூறுகிறது.[1] இதனாலும் நாகர்கள் மலையாளத்துப் பண்டைய குடிகள் என்பது புலப்படும்.

1. Kerala Charitram by Krishnapisharoti.

மைசூர், குடகுப் பகுதியில் கிடைக்கும் சாசனங்கள், 'அந்நாட்டுப் பண்டைய குடிகள் நாகர்கள், பாம்பினை வணங்குபவர்கள், பெண்வழிச் சொத்துரிமையுடையவர்' எனக் குறிக்கின்றன. தென்னாட்டில் சமுத்திர குப்தன் படை எடுத்து வந்த போது எதிர்த்தவர்களுள் கணபதி நாகன் ஒருவன். சிவஸ்கந்த நாக சதகர்ணியின் மகளை மணந்து ஓர் பல்லவன் காஞ்சியை அடைந்தான். சாதவாகனரது நாட்டினை அவர்களது வீழ்ச்சிக்குப்பின் சூட்டு நாகர் அடைந்தனர். கதம்பர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் தங்களை நாகர் மரபினர் எனக் கூறிக் கொள்ளுகின்றனர். துளுநாட்டு ஆளுபர் (ஆள்வார்)களும் நாக மரபினர் எனக் கூறப்படுகின்றனர். ஆதலின் மலையாளப் பகுதி நாகர்கள் வாழ்ந்த இடம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

நாகர், நாக இலச்சினையையுடையவர்; தக்ஷகர் எனவும் கூறப்படுவர். உடையில்லாமல் சஞ்சரிப்பவராதலின் நாகர் எனப்பட்டனர். (Nangta - Bengali, Nanga—Hindustani = Naked). 'நோக்' (Nog) என்னும் சொல் திரிந்து நாகர் என வழங்குகிறது என்பர். 'நோக்' என்றால் நாகர் மொழியில் 'மக்கள்' எனப் பொருள்படும். மக்களாகக் கருதப்பட்டவர், மக்களது வளர்ச்சிக்குக் காரணமானவர் எனப் பொருள் கொள்ளப்படும். இது அவர்களது மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையிலிருந்து புலப்படும். நாகரிகம் என்னும் சொல்லும் இவர்களது வாழ்க்கையிலிருந்து தோன்றியது எனக் கருத இடனுண்டு. கச்சாரி மொழியில் நாகர் என்னும் சொல்லுக்கு வீரர் என்பது பொருளாம். இடையின் மேல் பகுதி மனித வடிவாகவும் கீழ்ப் பகுதி பாம்பின் வடிவாகவும் உள்ளவர் நாகர் எனக் கூறுவர். எக்காரணம் பற்றி இங்ஙனம் கூறினர் என்பது விளங்கவில்லை. சிங்களச் சிற்பங்களும் இந்தியாவில் அமராவதிச் சிற்பமும் நாகர்களை அவ்வடிவில் காட்டவில்லை. நாகத்தின் தலை போன்ற முடியினை அணிந்த மனிதர்களாகத்தான் அச் சிற்பங்கள் குறிக்கின்றன. நாகர்கள் இன்பம் நிறைந்த வாழ்க்கையினர் என்பதை நம் நாட்டுப் புராணங்களும் கூறுகின்றன. நாகர்கள் இந்தியாவில் பெரும்பான்மையான பகுதிகளில் வாழ்ந்தவர்; மன்னர்களாக நாடாண்டவர். நாகர்கள் அசுரர்கள்; நாகர்கள் வீழ்ச்சியடைந்த பின் அசுரரும் வீழ்ச்சியுற்றனர் என்பர்.[1] சுமேரு பகுதியிலிருந்து இந்திரனால் துரத்தப்பட்டு சால்மலித்வீபத்தை (Chaldia) அடைந்தனர் என்பர்.[2] இவர்கள் தார்த்தாரியர், தார்த்தாரிய மலைப்பகுதியில் வாழ்ந்தவர்.[3] தார்த்தராஷ்டிரன்

1, 3. Pre Buddhist India by Mehta

2. Kutavaka Jataka.

(Dhataratta—தார்த்தாரியத் தலைவன்) என்னும் சொல்லைத் திருதராஷ்டிரன் என்னும் சொல்லொடு ஒப்புநோக்குதல் தக்கது. தார்த்தாரியர் திராவிடர்களே என்பது வரலாற்றாராய்ச்சி முடிபாம்.

நாகர்களுள் ஆய் நாகர் (Ao Nages) ஒரு பிரிவினர்; திருந்திய வாழ்க்கையுடையவர்; அஸ்ஸாம், பர்மா பகுதியில் வாழ்பவர். 'ஆய்' என்ற சொல் 'தாய்' எனப் பொருள்படும். இவர்கள் தாயை இச் சொல்லால் அழைத்தமையின் இப்பெயர் பெற்றனர் என்பர்[1] (Retes, Assam—Syam—(Saiyam)—Aham = Tas) நந்தமிழ் நாட்டில் ஆய் மரபினர் இம்மரபினரே யாவர். ஆய் அண்டிரன் இலிங்க வழிபாட்டொடும் நாகத்தொடும் தொடர்பு கொண்டிருப்பது நோக்கத்தக்கது. ஓய் (Oyo) என்ற சொல்லும் தாய் எனப் பொருள்படும் என்பர். நல்லியக்கோடன் இம்மரபினனுவன். ஒய் மரபு நாகர் மரபு என நச்சினார்க்கினியர் சிறுபாணாற்றுப் படையில் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. இலங்கை வரலாற்றாசிரியராகிய திரு. இராஜ நாயகம் அவர்கள் நாகர் விசுவகர்மர் என்பர்.

நாகர்களும் கச்சாரிகளும் ஓரினத்தவர் என்பர் வரலாற்றாசிரியர்கள்[2] அஸ்ஸாமில் காமரூபம் என்னுமிடத்தில் அமைந்துள்ள காமாட்சி ஆலயம், இவர்கள் தேவி வணக்கமுடையவர், சாக்தர்கள் என்பதை உணர்த்துகிறது. காமாட்சி - காமாக்யா-காளியின் அம்சம், தாமசாரிமாயை என்பர். மலையாளத்துப் பகவதி வழிபாடு ஆங்கு நாகர்கள் வாழ்ந்தனர் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

கச்சாரிகள் சீனு, திபேத் பகுதிகளில் வாழ்ந்தவர், பிரமபுத்ரா நதிப் பள்ளத்தாக்கில் வாழ்பவர். கச்சாரி, கச்சினகச்சி, கோச் மரபுகள் ஒரு மரபின் பிரிவுகளேயாம். சின் மரபினர் வாழ்ந்த இடம் சீனு.[3] கோச் மரபினர் வாழ்ந்த இடம் கோச், கோச் பீஹார் என வழங்கப்படும் கொச்சின் என்னும் நகரமும் அவர்கள் பெயராலேயே வழங்கப்பட்டதாகல்வேண்டும். கச்சி நகரம் கச்சி மரபினர் வாழ்ந்த இடமாகவேண்டும். இவர்கள் தமிழ்நாட்டுக் குடிகள் என ஹாட்ஜ்சன் (Hodgson) என்னும் வரலாற்றாசிரியர் கூறுகின்றார். கச்சார் நாட்டுப் பகுதியில் அழிந்து கிடக்கும் கட்டடங்கள் கச்சாரிகளது கட்டடக் கலை வன்மையை உணர்த்துகின்றன. கச்சாரிகள் திமாசா (Dimasa)

---

1. Ao Nagas of Assam by W. C. Smith.
2. History of upper Assam by L. W. Shakespear.
3. Living races of mankind by Hutchinson.

எனவும் வழங்கப்படுவர் திமாசா (Dimasa) என்றால் பேராறு களின் மக்கள் எனப் பொருள்படும்.[1] எனவே ஆறுகளுள்ள இடங்களில் பயிர்த்தொழில் செய்துவந்தனர் என்பது புலனாகும். இவர்கள் மலைப்பகுதியில் நீர்வளமுள்ள இடங்களில் அமைதியாக வாழ்ந்தவராவர். 'சேரமக்கள்' என்பதற்குத் திரு. கோபால் பணிக்கர் பயிர்த்தொழில் செய்பவர் (chera-dam, makkal-people = agriculturist) எனப் பொருள் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. செரு என்னும் சொல், வயல் எனப் பொருள்படுதலும் கவனிக்கததக்கது. கோலேரிய மரபினராகிய முண்டர்களது மொழியில் செரு (cheru) என்னும் சொல் ஊர் (village) எனப் பொருள்படும். அச்சொல்லே கோலேரியருள்—முண்டர்களுள் வன்மைமிக்க ஓர் மரபினைக் குறிக்கும். கோசல, அங்க தேசங்களில் செருகுல மன்னர்கள் ஆண்டனர் என முண்டர் வரலாறு கூறுகிறது.[2] மதுகைடபன் ஓர் முண்டன். கங்காநதிக் கரையிலுள்ள அம்பிகோட் [Ambikot சேரம் (Cherum) எனப்படும் கோட்டை] செரு மன்னருக்குரியது. முண்டர் மொழியில் கச்சு (Kachua) எனில் ஆமை எனப் பொருள்படும். கச்சாரிகளது நகரத்துள் ஒன்று கமடாபூர் (Kamatapur), இறைவன் கமடேஸ்வரன். கமடம் என்பது ஆமை ஆதலின் கச்சாரிகள் முண்டர்களது இனத்தைச் சார்ந்தவராவர். சிங்போங்கா (Singbonga) என்னும் இறைவன் முதலில் ஆமை, நண்டு, அட்டை மூன்றையும் உண்டாக்கி, உயிர்களைப் பெருக்கிப் பிறகு மக்களைப் படைத்தார் என முண்டர்கள் வரலாறு கூறுகிறது. இவர்களது கொள்கையின்படி முண்டர்கள் (கச்சாரிகள் - நாகர்கள்) உலகத்தில் முதன்முதலில் தோன்றிய மக்களாவர்.

கச்சாரி மரபில் இருபது பிரிவுகளுண்டு. அவர்களுள் சுவர்க்கர் (Swarga āroi) என்பார் ஒரு பிரிவினர். சேரர்கள் வானவர் எனப்படுதல் இச் சுவர்க்கரை நினைவூட்டுகிறது. பான்பார (Bānbār āroi) என்பவர் ஒரு பிரிவினர். மூங்கில் நிறைந்த பகுதியில் வாழ்பவர் என்பது இச்சொல்லின் பொருள். இச்சொல்லொடு 'வானவரம்பன்' என்னும் சொல் ஒப்புநோக்குதற்குரியது,

கோச் (Koch) மக்கள் அஸ்ஸாம் பகுதியில் பயிர்த்தொழில் செய்து வாழ்ந்தவா. மகம்மது துக்ளக், தனது படைகளை அந்நாட்டில் செலுத்தியபோது அப் படைவீரர்கள், 'அந்நாட்டு மக்

1. History of Assam by Edwar Gait.
2. History of Mundas by Saratchandra Ray.

கள் மந்திரக் கலையில் வல்லவராதலின் அந்நாட்டினுள் நுழைய
மாட்டோம்' எனக் கூறியதாக L. W. ஷேக்ஸ்பியர் என்னும்
வரலாற்றாசிரியர் கூறியிருக்கிறார். தாய்(Tai) என்னும் மரபினர்
கச்சாரி மரபினைச் சார்ந்தவர். கச்சாரிகள் போடோ (Bodo)
எனவும் போடோபிசா (Bodofisa) எனவும் வழங்கப்படுவர்.
போடோபிசா என்றால் வீமனது மக்கள் எனப் பொருள்படும்.
வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தவர்கள் என டேராங்
(Darrang) பகுதியிலுள்ள சச்சாரிகள் கூறுகின்றனர். கோங்
(Kōng-Liasong Kōng) என்னும் சொல் கொங்கு நாட்டை
நினைவூட்டுகிறது. குரங்கர்கள் (Quoirangs) வாழ்ந்த இடம்
கொங்கு எனப்பட்டது போலும். இராமாயணம் குறிக்கும்
வானரர்கள் இவர்களாகத்தான் வேண்டும் என்பதில் ஐயம்
வருவதற்கில்லை. கச்சின், கச்சாரி, கோச், நாகர் ஆகியவர்கள்
மங்கோலியத் திராவிடர் எனக் கூறுகின்றனர். கோச் மரபினர்
ஆரியத் திராவிடர் எனவும் குறிக்கப்படுகின்றனர். கச்சி மக்
கள் கச்சாரி எனப்படுதல் போலக் கோச் மக்கள் கோசாரி
எனவும் வழங்கப்பட்டனர். கச்சாரி மரபினர் வாய்மையும் வீர
மும் உடையவராதலின் கோச் மக்கள் வாய்மொழிக் கோசராவர்.

கச்சாரி, கச்சின், கச்சி, கோச், நாகர், நாயர் ஆகிய யாவ
ரும் ஓரினத்தவரே என்பது அவர்களது பண்பாட்டொற்றுமை
யினால் விளங்கும்[1] (1) தூண்கள் நிறுத்தி அதன்மேல் வீடுகட்டி
வாழ்வர். (2) சவங்களை வீட்டின் மேல்பகுதிகளில் அடக்கம்
செய்து வைப்பர். (3) ஆண்களும் பெண்களும் தமக்கு விருப்ப
மான காதலரைத் தாமே தேர்ந்து கொள்வர். இதனால் திரு
மணத்துக்கு முன்பு இருபாலாருக்கும் ஏற்படும் கூட்டுறவினை
யாரும் தடுப்பதில்லை. எனினும் திருமணத்தின் பின்னர்க் கற்பு
வழுவாது இருக்கவேண்டும். விரும்பினால் காதலர் பிரிந்து
விடலாம். பின்னர், ஆடவர் வேறு மகளிரை, மகளிர் வேறு
ஆடவரை மணம் செய்துகொள்ளலாம். (4) மணமாகாத
ஆடவர்கள் தங்கி உறங்குவதற்கென ஓர் தனியிடம்
உண்டு. மணமாகாத மகளிருக்கும் அவ்வாறு தனியிடம்
உண்டு. ஒரே இடத்தில் இருபாலாரும் தங்கியிருப்பதுமுண்டு.
இவ்வாறு தனித்திருக்கச் செய்வது மேற்குறித்த செய்திக்குத்
துணையாம். (5) மகளிர் பச்சை குத்திக்கொள்வர். (6) ஒவ்
வொருவரும் கேடயம் வைத்திருப்பர். (7) ஆடவர் மக்கள்
தலையினை வேட்டையாடுவர். அவர்கள் பகைவரை அழிக்குந்
திறமையினை இது உணர்த்துகிறது. மகளிர் ஆடவரை அத்
துறையில் ஊக்குகின்றனர். இவ்வேட்டையில் திறமையுள்ளவர்

1. Ao Nagas of Assam by Smith.

களைத்தான் மகளிர் மணப்பர். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தலைகளை வேட்டையாடிக்கொண்டு வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு மதிப்புண்டு. சேரர்களுக்கு எழுமுடியாரம் குறித்திருப்பதும் இவ்வுண்மையை உணர்த்தும்.

ஆதலின் முண்டர் மரபினரான (Cheru) குலத்தவரே—கச்சாரிகளே—நாகர்களே சேரர்கள் என்பது நன்கு புலனாகும். 'சேர' (Chera) என்னும் மலையாளச்சொல் பாம்பு எனப் பொருள்படும் என்பதும் ஒப்புநோக்கத்தக்கது. வானவன், வானவரம்பன் என்பன, சேரர் மரபினைக் குறிக்கும் சொற்களே என்பதும் புலனும். நாகர் மரபில் ஒரு பிரிவினரான மாறன் (Morans) என்பவர்கள் பாண்டிய மரபினராவர் என எண்ணுவதற்கிடனுண்டு. மலையாளத்து மாரன்மார் பாண்டியர்கள் எனக் கூறப்படுகின்றனர். இது ஆய்வுக்குரியது.

இயற்கையின் இயல்புகள்

[திரு. ஆ. சேனுபதி]

தடமலையின் பனிதடவும் மேகம் போலத்
  தனிமையிலே நெடுநேரஞ் சுற்றி வந்தேன்
திடமில்லா மனஞ்சுற்றும் சுழற்சி யென்னத்
  திரைதயிரின் மத்தென்னச் சுழன்ற யர்ந்தேன்
திடுமெனவே அயலிலுள வாவி கண்டேன்
  சேர்ந்ததண் தாமரையின் ஆட்டங் கண்டேன்
நடனமிடு மடமாதர் தடங்கண் வீச்சு
  நளினத்துக் கேற்றஇசை தாளங் கேட்டேன். (க)

தண்டாம ரைக்கயத்தின் கரையினோரம்
  தவழ்ந்தலையும் திரைக்கரத்தால் முகமன் கூற
மண்டூகம் ஓர்சார்பில் முழங்கக் கேட்டேன்
  மதுவுண்டு திளைத்திடவே பண்ணி சைத்து
வண்டூதும் மலர்மேலே பார்த்துச் சோர்ந்துன்
  வாழ்க்கையினைக் கெடுக்கின்றேன் ஈதோ என்று
நண்டூர்ந்து கொடிவெட்டி நாசஞ் செய்ய
  நயவஞ்சம் பொறாதுநான் திரும்பி னேனே. (உ)

முத்துமணித் திரைக்கடலின் மேலே சென்று
  மோகனப்புன் முறுவலொடு நீர்க வர்ந்தே
தித்திக்கும் மதுப்பிலிற்றும் பூங்கா மேலே
  தெண்ணீரைத் தெளித்துமலர்த் தூக்கம் போக்கி
எத்திக்கும் குளிர்பந்தர் தானு யாகி
  எரிகனற்றும் பகலவனின் சூட்டை யாற்றி
மத்தளிகன் போலார்த்து வானத் தூர்ந்து
  மழையாகப் பெய்திடுவேன் மேகம் என்பேர். (ங)

சித்தமருத்துவ மாநாட்டுப் பேருரை*

[திரு. பண்டித, எஸ். எஸ். ஆனந்தர்]

அன்பிற் சிறந்த பேரறிஞர்களே !

சித்த மருத்துவ சிரோன்மணிகளே ! வணக்கம்

நமது நாட்டில் ஆங்கிலர் ஆட்சிக்குமுன் மக்கள் இனம் (சமூகம்) இக்காலத்தில் தோன்றியுள்ள பற்பல நோய்களைப் போன்ற நோய்களுக்கு இரையாகாமல் வலிமையுடன் நலமாய் நூறாண்டுவரை வாழ்ந்துவந்தார்கள். ஆங்கிலர் ஆட்சி தொடங்கிய பின்னர் தங்கள் மொழியாகிய வலையில் மக்களைச் சிக்க வைத்தனர். நம் நாட்டைத் தங்கள்நாட்டுப் பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகளாகச் செய்தனர். தங்கள் நாட்டு மருந்துகள் நம் நாட்டில் வியாபாரமாவதற்கு ஆங்கில மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி அதில் நம்மவர்களைப் படிக்க வைத்து டாக்டர் எனப் பட்டங் கொடுத்துத் தங்கள் மருந்துக்கு ஏஜண்டுகளாக்கிக்கொண்டனர்.

ஆசுப்பத்திரிகளெனப் பெரிய கட்டிடங்களைக் கட்டி அவர்கள் மருந்தைக்கொண்டு இலவசமாக மருத்துவம் செய்தனர். அவர்களின் பகட்டான பலவகை விளம்பரங்களில் மக்கள் மயங்கி நம் நாட்டு மருந்துகளையும் மருத்துவர்களையும் கைவிட்டனர். அன்று தொடங்கி நமது நாட்டு மருத்துவம், இயற்கை மருத்துவம், அறுவை (இரண) மருத்துவம் முதலிய முறைகள் மறையத்தொடங்கின. அயல்நாட்டு மருந்துக்காக நம் நாட்டுப் பணம் கோடிக்கணக்கில் அவர்கட்குச் செல்கின்றது. நமது நாட்டு வெப்ப தட்பங்களுக்கும் உணவுக்கும் பொருந்தாத மேல் நாட்டு மருந்துகளால் நம் மக்கள் உடல்நிலை கெட்டுப் பலவித நோய்கள் மிகுதிப்பட்டு, உடல் வலிமை குறைந்து, ஆயுள் குறைந்து அழியத்தலைப்பட்டனர். இந்த உண்மையை ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நம்முடைய தலைவர்கள் கண்டு இந்திய மருத்துவத்தைச் சிறப்பாகத் தென்னாட்டுத் தமிழ்ச் சித்த மருத்துவத்தை உயிர்ப்பித்துப் பொதுமக்களைப் பாதுகாக்கப் பெருமுயற்சிகள் செய்து தமிழ்நாட்டுக்குத் தலைநகரமாகிய சென்னையில் இந்திய மருத்துவப்பள்ளியை நிறுவி, மருத்துவ மனையையும் அமைத்துச் சித்தர் நூல்களிலுள்ள நோயணுகா விதிகளையும் வந்த நோய்களை மருந்தின்றி நீக்கும் இயற்கை

---

*சேலம் நகரில் 7—6—55 இல் நடைபெற்ற சித்தமருத்துவ மாநாட்டில் நிகழ்த்தியது.

மருத்துவங்களையும் நமது நிலத்தில் நம்முடன் தோன்றிய மருந்துகளாலும் பத்திய உணவு, செயல் மாற்றங்களாலும் நோய் நீக்கும் முறைகளைத் தமிழ்மொழி வாயிலாகவே கற்பிக்க ஏற்பாடு செய்தார்கள். மருந்தென்பதே ஒரு தனிப்பொருள் அல்லவென்பது நம் பெரியோர்கள், சித்தர்கள் கண்ட உண்மை.

'மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே.' (திருமூலர்)

'உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து.' (திருவள்ளுவர்)

எனக் கூறுகின்றனர். இத்தகைய அரிய பெரிய உண்மைகளை மருத்துவர்களும், மற்ற மக்களும் அறிந்து ஒழுகும்படி செய்ய வேண்டும்.

அவசியம் நேர்ந்த காலத்தில் தற்கால மேலை நாட்டு அறுவை மருத்துவம் தெரிந்துகொள்ளவேண்டுமாயின் ஆங்கில மல்லாத பிரான்ஸ், ஜர்மனி, ரஷியா, சீனு போன்ற நாடுகளைப் போல் நமது மொழியின் வழியாகவே அதனைக் கற்க ஏற்பாடு செய்தார்கள். ஆங்கிலத்தில் எழுதிய உடல் நூலை (அனுட்டமி) யையும கெமிஸ்ட்ரி யையும், மிட்ஒய்பரியையும், மெடிகல் சூரிஸ் புருடென்ஸ் எனும் மருத்துவ நீதி நூலையும் சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர்களுக்காகத் தமிழில் அச்சிட்ட நூல்கள் இன்னும் இருக்கின்றன. அவைகளை நமது தமிழ் மருத்துவ நூல்களோடு ஆலோபதி முறைகளையும் தமிழி லுள்ள புத்தகங்களைக் கொண்டு கற்பிக்காமல், அந்நூல்களைப் புறக்கணித்து ஆங்கிலத்தின் வழியாகவே கற்பிக்கவேண்டுமென ஐந்தாறு ஆண்டுகளாய் ஆங்கில ஆட்சி விலகியபின்னரும், ஆங்கில மொழியையும், ஆங்கில மருத்துவத்தையும் ஆதரித்துப் பெருக்கி வளர்க்கின்றார்கள். ஆங்கிலர் ஆட்சிக்காலத்தில் தந் நலத்துக்காக அவர்கள் நடத்திவந்த மெட்ராஸ் மெடிகல் காலேஜை அவர்கள் ஆட்சி முடிந்தபின் இந்திய மருத்துவக் கல்லூரியாய் மாற்றுமல் அதே நிலையில் இன்னும் நடத்திவருவதும், இந்திய மருத்துவக்கல்லூரியில் ஆங்கிலமொழியையும், ஆங்கிலமருத்துவத்தையும் மிகுதிப்படுத்தி ஆங்கில மருத்துவக் கல்லூரியாய் மாற்றப் பார்ப்பதும் முறையாகுமா? அதனல் தமிழ்மருத்துவக் கலை அழிந்து, நம் மக்கள் உடல் நிலை கெட்டு நாசமாவதோடு ஆங்கில மருந்துக்காக நமது நாட்டுச் செல்வ

மும் கொள்ளைபோகின்றது. தற்காலம் இந்திய மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஆங்கில மருத்துவம், தமிழ் மருத்துவம் இரண்டையும் சரியாய்ப் படிக்க முடியாமல் வருந்துகின்றார்கள். இந்திய மருத்துவக் கல்லூரியில் ஆங்கில மருத்துவத்துக்கு மிகுதி ஆதரவு காட்டுகிறபடியால் அலோபதி மருத்துவத்தைக் கவனித்துப் படிக்கின்றார்கள். சித்தமருத்துவத்தைப் புறக்கணிக்கின்றார்கள். அவர்கள் படித்து வெளியேறியதும் கிராம மருத்துவர்கள் முதல் எல்லோரும் ஆங்கிலமருத்துவமே செய்கின்றார்கள். ஊசிபோடுகின்றார்கள்.

இன்று ஜர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சைனு, ருஷியா போன்ற நாடுகளில் பல்கலைக்கழகம் (யூனிவர்சிடி) அந்தந்த நாட்டு மொழிகளில் நடைபெறுகின்றது. மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய கலைகளெல்லாம் அந்தந்த நாட்டுமக்களின் தாய் மொழியின்மூலமாகவே மிக எளிதாய்க் கற்பிக்கப்படுகிறது. அதனுல் அந்த நாட்டு மக்களுக்கு இவ்வளவு பொருட்செலவு, நேரச்செலவு, மூளைச்செலவின்றி வலிமையுள்ளவர்களாக இவ்வளவு நோய்களின்றி வாழ்கின்றார்கள்.

அயல்மொழியாகிய ஆங்கிலமொழியை வருந்திக்கற்று அதன் வழியாக எல்லாக் கலைகளும் கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் பிராண சக்தி, நேரம், பணம் முதலியவைகள் மிகுதியாய் வீணுக்கப்படுகிறது. அதனுல் மாணவர்கள் மெலிந்து நோய்வாய்ப் படுகின்றார்கள். கோடி மக்கள் ஒரே மொழியைப் பேசும் நாட்டில் அந்நாட்டு மொழியிலேயே பல்கலைக் கழகம் நடைபெற வேண்டும் எனவும், ஆங்கிலர் ஆட்சி நம் நாட்டில் முடிந்த பின்னும் நமக்கு ஏன் இந்தத் தொல்லை என, இந்திய அரசாங்கத் தலைவர் திரு, இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் ஐதராபாத்தில் பேசினுர்கள்.

மூன்று கோடிக்குமேல் சுமார் நான்குகோடி தமிழர்கள் உள்ள தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் ஏன் தமிழ்மொழியில் நடைபெறக்கூடாது? அயல்நாடுகளில் அணுக்குண்டு ஆராய்ச்சி கூட அவரவர் நாட்டுமொழிகளில் நடைபெறுகின்றது. நம் நாட்டில் என்ன நடைபெறுகின்றது? ஆங்கிலர்ஆட்சி நடைபெறுங்காலத்தில் இந்திய மருத்துவப்பள்ளியில் மருத்துவம் படிக்கத் தமிழில் நல்ல அறிவு வேண்டும். ஆங்கிலம் கட்டாயமில்லை எனத் தீர்மானித்தார்கள். ஆங்கில ஆட்சி போனபின் இந்தியமருத்துவக் கல்லூரியில் ஸ்கூல் பைனல் படிப்புப்போதாதெனவும், கல்லூரிப்படிப்பு இண்டர்மீடியட் படித்துத்தான் இந்திய வைத்தியம் படிக்கவேண்டுமெனவும் முடிவுசெய்து

நடத்துவதால் தமிழ்மாணவர் பலர், அக்கல்லூரியில் தமிழ் மருத்துவம் படிக்கவியலாமல் இருக்கிறார்கள். இந்தியாவில் இந்திய மருத்துவம் படிப்பதற்கு ஆங்கிலம் இண்டர் படிப்பு வரை வேண்டுவதில்லை. அதை மாற்ற வேண்டும். ஆங்கிலர் காலத்தில் சென்னையில் அவர்கள் ஏற்படுத்திய ஆங்கில மருத்துவக் கல்லூரியை இந்திய மருத்துவக் கல்லூரியாய் மாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சங்கமிருந்து தமிழ் வளர்த்த மதுரையில் அரசினர் அண்மையில் ஆங்கில மருத்துவக்கல்லூரி ஆரம்பித்துள்ளார்கள். அதைத் தமிழ் (சித்த) மருத்துவக் கல்லூரியாய் மாற்றவேண்டும். தஞ்சையில் ஆங்கிலமருத்துவக் கல்லூரி நடத்த ஏற்பாடு செய்வதையும் சித்தமருத்துவக் கல்லூரியாய் நடத்தும்படி செய்யவேண்டும். அப்படிச்செய்யாமல் தமிழ் நாட்டிலே ஆங்கில மொழியையும், ஆங்கில மருந்துகளையும் வளர்த்துக்கொண்டே போனால் நமது தமிழ்மருத்துவம் அடியோடு அழிந்துவிடும். அதனால் மக்களுக்குப் பிணிகள் மிகுந்து உடலுரம் குன்றி ஆயுள் குறைந்து அழிய நேரும். அயல்நாட்டு மருந்துக்காக நமது பணமும் இலட்சக் கணக்கில் மேலைநாட்டுக்குப் போய்ச் சேரும்.

ஆங்கில அலோபதி மருத்துவமுறைப்படி எக்சரே படம் பிடித்து நோயாளர் பலரை அறுத்துத் தீர்க்கவேண்டுமென முடிவு செய்யப்பட்ட பத்துப் பேர்களில் சுமார் எட்டுப் பேர்களுக்கு அறுவையின்றி நமது தமிழ்மருந்தால் நோய் நீக்கப்பட்டது. அலோபதி டாக்டர்கள் தீராதெனக் கைவிடப்பட்ட பல பிணியாளர்கட்குத் தமிழ்ச்சித்த மருந்தால் பிணி நீக்கப்பட்டது. இந்த உண்மைகளைக் கண்கூடாகக் காணலாம்.

தமிழிலுள்ள மருத்துவம், நீதி, யோகம், ஞானம், கணிதம், இசை, ஓவியம் போன்ற உயர்ந்த கலைகள் கெட்டழியாவாறு இப்போதுமுதல் ஒற்றுமையாக ஊக்கத்துடன் உறுதியுடனிருந்து தமிழர்கள் தங்கள் மொழியையும் அதிலுள்ள கலைகளையும் காப்பாற்றி வளர்க்கவேண்டுவது முதற் கடமையாகும்.

தமிழில் வழிபாட்டுக்கும் எதிர்ப்பா ?

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராசாமிபிள்ளை]

தமிழ்மொழி தொன்றுதொட்டு உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும நின்று நிலவிவரும் உயர்தனிச் செம்மொழி. இம்மொழியை, அயல்மொழிப் பித்துப்பிடித்தவர்களும், அடிமை மனப்பான்மைகொண்ட புல்லுருவிகளும் சில பல இடங்களில் ஒதுக்கி முன்னேறவிடாது தடுத்தொழித்தனர். காட்டாகத் தேவாரம் பாடிய மூவர் அடியார்கள காலத்தில் மறைக்காடு என்றிருந்ததை, வேதாரண்யம் என்றும், முதுகுன்று என்பதை, விருத்தாசலம் என்றும், குடந்தை, குடமூக்கு எனபதை, கும்பகோணம் என்றும், மயிலாடுதுறை என்பதை மாயவரம் என்றும் திருவரங்கம் எனபதை ஸ்ரீரங்கம் என்றும் ஊர்ப்பெயர்களையெல்லாம்கூடத் தமிழ்ப்பெயர் நின்ற இடத்தில் வடமொழிப்பெயரை இட்டுத் தொலைத்தனர். ஒவ்வோர் ஊர்களிலும் உள்ள கடவுள் பெயர்கள் யாவும வாயாற்கூடச் சொல்ல இயலாத கனைப்போசைகளால் இயன்ற வடமொழிப் பெயர்களே ஆக்கி மறைத்தனர். இவைகளையெல்லாம் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்தவன் எவனும் உற்றுணர்ந்தால் வயிறெரியாமல் இரான். இவ்வாறு ஊர்ப்பெயர்கள் கடவுளர்பெயர்களை மாற்றிய புல்லுருவிகளாலேயே கோவில்களில் தமிழ் வழிபாடு (அருச்சனை)இல்லாமல் வடமொழியை மந்திரமொழியாக வைத்ததில் வியப்பொன்றுமில்லை. இவ்வாறு நுழைவிக்கப்பெற்றதே கோவில்களில் இன்று நிகழும் வடமொழி மந்திர அருச்சனைகள்.

இன்று, நாட்டில் தமிழ்மொழிக்கே எல்லா இடங்களிலும் முதன்மை கொடுக்க வேண்டுமென்னும் எண்ணம் மக்கள் எல்லாரிடத்தும் பரவிவரும் உண்மையாகும்; அது, முறைமையுமாகும். ஆனால், எதிலும் புல்லுருவிகளும் பதடிகளும் இருப்பது உலக இயல். இன்று கோவில்களில் வழங்கும் வடமொழி மந்திரங்கள் இன்னதென விளங்காதனவாகவும், அருச்சனை புரிவோர் பலர் அம்மந்திரங்களின் பொருளறியாதவர்களாகவும் தப்பும் தவறுமாகக் கடவுள் திருமுன் சொல்லி மலர்தூவி வழிபாடு செய்கின்றனர். அருச்சனை புரியவரும் அப்பாவிகளான அன்பர்கள் அருச்சகர்களால் செய்யப்படுவன இன்னதென அறியாராய்க் கோவில்திருநீறு முதலியன பெறுவ்ச செல்வதோடு அமைகின்றனர். ஆகவே, இவ்வாறு நடைபெறுதல் மக்களை ஏமாற்றுதல்போல் ஆகின்றது.

இதனை உணர்ந்த உண்மையாளர் சிலர் முயன்றே எல்லோருக்கும் பொருள் விளங்கக்கூடிய வகையில் தமிழ்மொழியில் மலர்வழிபாடு செய்யவேண்டுமென்று கருதினர்; விரும்பினர். அவ்விருப்பை நங் கழகம் நிறைவேற்றித் தமிழகம் முழுவதும் கடல்கடந்த நாடுகளில தமிழர் வாழும் இடங்களிலெல்லாம நூல் வெளியிட்டுப் பரப்பிற்று. வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் யாவரும் நன்கு வரவேற்றனர். அதனைச் செயலில் கொணரவும் முன்வந்தனர். ஆங்காங்கே திருக்கோவில்களில் தமிழிலேயே வழிபாடு செய்விக்கின்றனர். இங்கேயும் சில கோவில்களில் நிகழ்கின்றன. குன்றக்குடி அடிகளார் தம் ஆட்சியின்கீழ் நிலவும் கோவில்களிலெல்லாம் தமிழிலேயே அருச்சனை நிகழ்த்தும்படி கட்டளையிட்டுள்ளார்கள்; அவ்வாறே அககோவில்களில் நிகழ்ந்து வருவதாக அறிகின்றோம். இங்கே வடமொழியே தம் உயிரென்றும் தமக்கே உரிய மொழியென்றும கூறுவோர் எதிர்க்கவில்லை. உடன்பிறந்தே கொல்லும் நோய்போன்று தாம் தமிழர் என்றும் கற்றுத்துறைபோனவரென்றும் சொல்லிக்கொள்ளும் அறிஞர்கள் சிலரும், சைவப்போர்வை போர்த்த புலிகளும், மணிப்பட்டம்பெற்ற மாண்பினரும், சித்தாந்தச் செல்வரென்று சொல்லிக்கொள்ளுவோருமாகிய ஆண்டகைகளே எதிர்க்கின்றனர். அவர்கள் கூறுவன நாளிதழ்களில் வெளிவந்துள்ளன; இவர்கள் ஒரு கூட்டத்தில் ஒரு பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுங்கால், அதிற் கருத்துச்செலுத்திப் பேசாது, இடைப்பிறவரலாக, மற்றொன்று விரித்தலாகத் தமிழில் அருச்சனை செய்தலை எதிர்த்துப் பேசுகின்றனர். இவர்தம் அறிவிருந்தவாறென்னே! என்னே! இவர்தம் புல்லறிவாண்மையையும் பேதைமையையுங் கண்டு வருந்துகின்றேம்!

முன் தமிழிசை இயக்கந்தோன்றியபோது இவர்போன்ற புல்லுருவிகள் தோன்றி எதிர்த்தனர்; அவ்வெதிர்ப்பைத் தகர்த்துச் செட்டிநாட்டு வேந்தர் அண்ணாமலையரசரும், பேரறிஞர் ரா. க. சண்முகனாரும் நின்று அவர்தம் கொட்டம் அடக்கித் தமிழிசையை மேலோங்கச் செய்தனர். இன்று அது சிறந்தோங்கி வளர்ந்து வருகின்றது. அக்காலைத் தெலுங்கிற்குத்தான் இசை இசைந்ததென்றும, மற்ற மொழிகளுக்கு இவ்விசைப்பண்பு வாராதென்றும் இப்பேரறிஞர்கள் வாதிட்டனர். காக்கை வெளிதென்றும் தாய்க்கொலை சால்புடைத்தென்றும் கூறும சிற்றினம் எது கூறாது! யாவும் கூறுமன்றோ? இவ்வாறே இற்றை நாள், தமிழ்வழிபாட்டுமுறையை எதிர்க்கும் குழுக்கள் தோன்றியுள்ளன; அவர்கட்கு இன்னும் அடிமைப்புத்தி மாறவில்லை!

ஒருவர் சொல்கிறார், தமிழில் மந்திரமொழியில்லையென்றும் அதன் பொருளைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாய மில்லை. நோயாளிக்கு நோய் தீரவேண்டுமென்றி, நோய்க்குக் கொடுக்கும் மருந்தை எதனால் இயன்றதென்று கேட்கவேண்டுவ தில்லையென்று. எதனால் ஆனது? அதை எவவாறு செய்வது? என்று ஒருவன் கேட்பது குற்றமா? மூன்றும இரண்டும ஆறு என்று ஒருவன் கூறுகின்றான். அஃது எவ்வாறு ஆறாயிற்று என்று கேட்பது தவறா? எவ்வாறு தவறாகும்! அதுபோல் கோவிலில் நின்று நீ ஏதோ சொல்கின்றாயே, அதற்குப் பொரு ளென்ன என்று அறியவிரும்புவது தவறா? அது பொரு ளற்ற ஒலி என்றால் அது, வெறும் இரைச்சலாகவன்றோ முடியும். பொருளற்ற ஒன்றைப் பொருளாகக் கொள்வது அறிவோடுபட்ட செயலாகுமா?

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

எனவரும் வள்ளுவர் வாய்மொழியிற் கூறுவதும் தவறாகவன்றோ முடியும. ஆகவே, வடமொழியில் கடவுள் திருமுன் கூறுவதி லும் தாம் அறிந்த மொழியில்—சாவாது நாட்டிலும் ஏட்டிலும் வழங்கும் மொழியில்—கூறி வழிபாடுசெய்வது எதனால் ஆகா தது? என்று அந்த அறிஞர்களைக்கேட்கின்றோம். வடமொழியே ஆண்டவனுக்கு உகந்தது; தமிழ் உதவாதென்றால், நாயன்மார் களும் ஆழ்வார்களும் வடமொழியிலன்றோ சுலோகம பாடியிருப் பர்? அவர்கள் தமிழில் பாக்களை அருளிச் செய்ததின் நோக்க மென்ன? தமிழிலேயே கடவுளைத் தொழவேண்டுமென்ற ஒன்றாலேயேயாம். அருச்சனை செய்வதின் நோக்கம் ஆண்டவன் சிறப்புக்களை எடுத்துப் பேசிப் புகழ்ந்து நம் குறைகளை நீக்கி நன்மையை அருளுமாறு வேண்டுதற்கென்றே என்பதை நன்கு ஆய்ந்து உணரின் அறிதுமன்றோ? வடமொழியில் செய்யும் அருச்சனை மொழிகள் இவர் கூறுவதுபோன்று வெறும் ஒலி யாக இருக்கவில்லை. வெறும் ஒலியாக இருக்குமானால் அது மொழியாவதியாங்ஙனம்? ஒன்றையெடுத்துக்கொள்வோம்:

'சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் ப்ரசந்ந வதநம் தியாயே
சர்வ விக்நோப சாந்தயே'

என்பது, ஒரு சுலோகம். இதில், 'சுக்லஅம்பரதரம் - வெள் ளாடை அணிந்தவனே, விஷ்ணும் - எங்கும் நிறைந்தவனே,

சசிவர்ணம் - சந்திரன்போன்ற ஒளிபொருந்தியவனே, சதுர்ப் புஜம்-நான்கு தோள்களையுடையவனே, ப்ரசந்ந வதநம் - மலர்ந்த முகத்தையுடையவனே, தியாயே - வணங்குகின்றேம், சர்வ விக்நோப சாந்தயே - எல்லாத் துன்பங்களையும் நீக்கியருள்வா யாக’ என்று பொருள் தருதலை அறிக. இன்னும் பிள்ளையார் வணக்கமாக,

‘மூஷிக வாகன மோதக ஹஸ்த
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே’

எனவரும் இச் சுலோகமும் பொருளற்றதாக இல்லை. ‘பெருச் சாளிவாகனனே, கொழுக்கட்டையுடைய கையனே, குறுகிய வடிவனே, சிவபெருமான் புதல்வனே, துன்பங்களைத் தீர்க்கும் தலைவனே, உன் திருவடிகளை வணங்குகின்றேம்’ என்றே பொருள் கொள்ளக்கிடக்கின்றது.

ஆகவே, தமிழில் வழிபாடு செய்தால் இவ்வாறு மூடமந்திர மாக இல்லாமல் யாவரும் அறிந்துகொள்ளற்கேற்ற முறையில் இருக்கும். தானறிந்த மொழியில் ஆண்டவன் முன்னிலையில் கூறி இறைவனை வழிபட்டால் அன்பும் உணர்ச்சியும் பெருகுமே தவிரக் குறையாது! புல்லுருவிகள் கூறுகிறபடி இதில் மொழி வெறியோ! இவருக்குப்போன்ற அடிமை மனப்பான்மையோ இருக்கவில்லை என்பதைப் பொதுமக்கள் யாவரும் நன்குணர் வார்களாக. இவர்கள் போடுகின்ற முட்டுக்கட்டைகள், பெரு வெள்ளத்தின்முன் மணலிணைப்போலவும், சூறைக்காற்றுமுன் இலவம்பஞ்சு போலவும் தகர்ந்து பறந்தோடியொழியும் என்ப தொருதலை. விளக்கின்முன் இருளெங்கே நிற்கும்?

ஆகவே, உணர்ச்சிமிக்க எம் தமிழ்ப்பெருமக்களே! இமை யத்தில் மீன் புலி வில் உருவெழுதிய வீரர்வழி வந்தவர்களே! மயிர்நீப்பின் வாழாக் கவரிமானன்ன மானமிக்க எம் தமிழ் வீரர்களே! நம் தமிழ்மொழி, நாடு விடுதலைபெற்றும் இன்னும் அரசியலில் இடம்பெறவில்லை! ஆங்கே வேற்றுமொழிகள் கூத் தாடுகின்றன! சட்ட அரங்கங்களில், மானமற்ற தமிழர் ஆகிய உறுப்பினர்கள் வேற்றுமொழியில் பேசுவதைச் சிறப்பெனக் கொண்டு தமிழை ஆட்சிமொழியாக்க முற்படாது வாளாவிருந்து காலத்தை ஓட்டுகின்றனர்! நீவிர் தமிழை ஆட்சிமொழியாக்க முற்படுங்கள்! கோயில்களில் இறைவன்முன் பேச வழிபாடாக் குங்கள்! விடுதலை! விடுதலை! இந்தியோடு ஆங்கிலத்திற்கும் விடுதலை கொடுத்து வழியனுப்புங்கள்! நம் தமிழே அரியணை யேறி எல்லாத்துறைகளிலும் மேலோங்க ஆக்குமின்! ஆக்குமின்!

நல்லிசை நிறுத்தவேண்டினல்....?

[குடந்தை. திரு. சு. கண்ணன், பி. ஏ.]

"வாழைப்பழம் வேண்டாமென்னும் குரங்கும் உண்டோ" என்று ஒரு பழமொழி உண்டு. அது குரங்கிற்குப் பழம் என்றால் மிக்க ஆசை என்று தெரிவிக்கிறது. அதுபோலவே மானிடரும் புகழ்பெற மிக்க ஆசையுள்ளவராக உள்ளனர். "புகழ் வேண்டாப் பூதலத்தோர் இல்லை" என்று கூறலாம். மனிதரின் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து நோக்கினல், அதன் அடிப்படையிலே, செயல்புரியும் மனிதனின் புகழ்பெற விழையும் மனநிலை நன்கு புலப்படும். நான்குபேர் நம்மை மதிக்கவேண்டும், ஊரும் உலகமும் நம்மைப் போற்றவேண்டும் என்ற எண்ணம் உந்துவதால்தான் பல செயல்களைச் செய்கின்றனர் மக்கள்.

புகழ்பெற விழைவது முதன்மையாகும். புகழ்தரும் செயல்களையே செய்யவேண்டும். எடுத்த பிறவியின் பயன் புகழ்பெறுதலே என்று கூறுகிருர் வள்ளுவர் கூட. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலின் தோன்றுமை நன்று" என்பது குறள். புகழ்பெருது வாழ்பவர் தோன்றுமலே இருந்திருக்கலாம் என்று இழித்துரைக்கின்றுர். எவனொருவன் இசையுடன் வாழ்கிறுனே அவனே 'வாழ்கிறுன்' என்ற சொல்லுக்கு ஏற்றவன்; இசையொழிய வாழ்பவர் வாழாதவர். வாழும் உயிர்க்கு ஊதியமாவது இசைபட வாழ்தலே அன்றி வேறில்லை என்பது தெய்வப் புலவர் கருத்து.

ஆக, பழந்தமிழ் நூல்கள் கூறும அறிவுரைகளையும் மக்களின் இயற்கை உள்ளப்போக்கையும் நோக்கினல், எல்லோரும் புகழ்பெற விரும்புவது இயற்கையே; இன்றியமையாததுங்கூட எனத் தெரிகின்றது.

எண்மை நிலையிலுள்ள மகனொருவன் அவாவுதல்போன்றே பண்டை மன்னரும் புகழ்பெற விழைந்தனர். மன்னனும் மனித உள்ளம் படைத்தவன் தானே! ஆதலால் தன் நாட்டு மக்கள் தன்னை நன்கு போற்றவேண்டும் என்று நினைந்தான். அதுமட்டுமன்று. பிறநாட்டு மன்னரும் தன்கீழ் வாழவேண்டும், பூதலம் முழுதும் தன் புகழ் பரவி மற்ற நாட்டு மன்னரும் மக்களும் தன்னை ஏத்த இவர்களுக்குமுன் தான் ஒருவனக வாழ வேண்டுமென விரும்பினன்.

இந்த நிலை அன்றுமட்டும் இருந்ததொன்றன்று; இன்றும் உண்டு. நாட்டில் இன்று எத்துணையோ கட்சிகள் உள. எண்ணற்ற தலைவர்கள் நாட்டை நடாத்த எழுந்துள்ளனர். எல்லோ

ரும் மக்களிடம் நன்மதிப்புப் பெற விரும்பியே செயலாற்று கின்றனர். இவ்விதம தன் மக்களிடமும் மற்றவர்களிடமும் சீரும் சிறப்பும் பெற்று இந்த உலகில் நல்லிசை நிறுத்திப்போக விரும்பினால், அதற்கோர் வழியுண்டு. அவ்வழியிலே தவறாது தலைவர்கள் சென்றால் தம்புகழ் ஈண்டு நிலைநிறுத்துவது திண்ணம்.

அவ்வழி யாது என்பதைப் பண்டைத் தமிழ்ப்புலவர் ஒருவர் கூறியிருக்கிறார். அன்று புகழ்பெற விரும்பிய மன்னனொருவனுக்கு எடுத்துக் கூறுமுகமாக கூறியுள்ளார். அவர் பெயர் குடபுலவியனார். அவர் வாழ்ந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக விருந்த சங்ககாலம். அவர் தம் அரசன் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் வகையிலே அவ்வழியைப் புலப்படுத்துகிறார். அதன் வழியிலேயே இன்றும் தலைவர்கள் நடந்தார்களேயானால் அவர் தம் எண்ணம் ஈடேறும்.

குடபுலவியனார் பாண்டி நாட்டுப் புலவர். பாண்டி நாட்டின் மேற்பகுதியில் வாழ்ந்து வந்தார். அரசனிடம் பொருட்கொடை பெற்றுச் செல்லுதலைமட்டுமே பண்டைப் புலவர்கள் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. அரசர்க்குப் பொருள்வளம் குன்றாது மேன்மேலும் பெருகுதற்குரிய செயன்முறைகளை ஆங்காங்கு அறிவுறுத்துவதையும் தம் கடமைகளாகக் கொண்டனர்.

அதுபோன்றே குடபுலவியனாரும். தாம் வாழ்ந்த பகுதியில் ஒருகால் நீர்நிலையின்றி விளைநிலம்குன்றி வாடும்போது நீர்நிலை பெருக அமைக்கவேண்டுமென பாண்டியனுக்கு உணர்த்தக் கருதினார். உடனே அரசவைக்குச் சென்றார். அங்கே அரியணையில் அரசன் அமர்ந்திருக்கக் கண்டார். ஒரு குடைக்கீழ் உலகையாண்ட அவனுடைய முன்னோர் புகழைக்கூறி அவனை நீண்டகாலம் இருக்க வாழ்த்தினார். வாழ்த்திவிட்டு அவனைக் கேட்கிறார்.

“ வயவேந்தே! நீ மறுமை உலகத்தில் நுகரும் இன்பத்தை வேண்டுகின்றாயா?”

“ ஆம் அறிஞரே!”

“ உலகத் தலைவர்களையெல்லாம் வென்று நீ ஒருவனாக ஆள விரும்புகிறாயா?”

“ உண்மையே! புலவரே.’.

“ எல்லாவற்றிற்கும் மேலாக நீ இவ்வுலகில் நல்ல புகழை நிறுத்திச்செல்ல விருமபுகிறாயா?”

“ ஆம் புலவரே ”

"பெரியோய்! அதற்கான செயல்களை இப்போது சொல்கிறேன் கேட்பாயாக" என்று கூறிப் புலவர் அவ்வழியைச் சொல்லத் தொடங்கினர்.

இப்புவியில் பல்லுயிரையும் ஆட்டி அல்லலுறுத்துவது பசிப்பிணியேயாகும். பசியின் கொடுமையைப்பற்றி மணிமேகலை பலபடியாகப் பேசுகிறது. "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" இப்பிணி எல்லா இழிசெயல்களையும் செய்யத்தூண்டும். இவ்வுலகில் பசியாத நல்வயிறே எங்கும் கிடையாது. ஆதலால் பசித்தவர்க்கு உணவு கொடுத்து உதவவேண்டும். "தானத்தில் சிறந்தது அன்னதானமே." அவ்விதம் நீர்இன்றி அமையாத இவ்வுடம்பிற்கு எவன் உணவு கொடுத்துக் காக்கின்றானே அவன் உயிர்கொடுத்தவனாகிறான். உணவைத்தான் உயிராக, முதற்பொருளாக கருதுகிறது இவ்வுடல். அவ்விதப்பெருமையையும் முதன்மையையும் பெற்றது இவ்வுணவு.

இந்த உணவை உற்பத்திசெய்ய, நிலத்திலே நீர்பாய்ச்சி வித்திட்டு விளைவிக்கவேண்டும. ஆதலால் உணவு என்று சொல்லப்படுவது நிலமும் நீரும் கூடியதொன்று என்று கூறிவிடலாம். அந்நீரையும் நிலத்தையும் கூட்டியவர் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் ஒன்று கூட்டியவராவர். அவ்விதம் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்து விளைவை அதிகரிக்கவைக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. நிலத்திற்கு நீர்வேண்டும்பொழுது வேண்டிய அளவு நீர் கிடைக்கும்படி சில ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். நீர்நிலைகள் இல்லாவிடத்து உண்டுபண்ண வேண்டும். நெல் முதலியவற்றை விதைத்தால் நீருக்காக வானை நோக்கி ஏங்கி நிற்கும் எத்துணையோ 'வானம் பார்த்த நாடுகள்' நாட்டில் இருக்கும். அவற்றால் அரசர்க்குப் பயன் கிட்டாது. ஆதலால் அரசர் அதற்கான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளல்வேண்டும்.

மழை எப்போதும் பெய்யாது; எல்லா இடத்திலும் பெய்யாது. ஆகையால் மழைபெய்யும்போது, பெய்யும் நீரை நல்ல இடத்திலே நெடிய நீண்ட கரையெடுத்துத் தேக்கிவைக்கவேண்டும். அவ்விதம் தேக்கிவைத்து வேண்டும்போது வேண்டிய அளவு விளைநிலங்களுக்குப் பாய்ச்சி விளைநலனைப் பெருக்கி மக்களுக்கு உணவு நல்கவேண்டும். அவ்விதம் நீரைத்தேக்கிய அரசரே இவ்வுலகிலே புகழை நிறுத்தியவராவர். அந் நீரைக் கட்டித் தேக்காதவர் புகழைக்கட்டித் தேக்கத் தவறியவராவர். நீரைத் தேக்கினல் நிலம் செழுமையுறும்; விளைநலம் பெருகும்; தன் நாட்டில் வாழ்நர்க்கு அளவற்ற உணவு கிடைக்கும்; மக்கள் மகிழ்வர்; அது மன்னனுக்கு மங்காப்புகழ் அளிக்கும்.

இதுவே புலவர் குடபுலவியனார் பாண்டியனுக்கு எடுத்துக் கூறிய மொழிகள். அவரது பொன்மொழி பாட்டாக எழுந்தது:

"..
....
மல்லன் மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்தி வானோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவண தள்ளா தோரே."

—(புறநானூறு - ௧௮.)

இதே வழியை இன்னும் நம் நாட்டில் நல்ல புகழ்பெற்று மேம்பாடு அடைய விரும்பும் எந்தத் தலைவரும் பின்பற்ற வேண்டும். இன்று மக்களிடையே பசிப்பிணி இல்லாதவாறு ஆக்கவேண்டும். அதற்கு மக்கள் விளைச்சலை அதிகரிக்கவேண்டும். பயிர்த்தொழிலுக்கு வேண்டிய நீர், என்றும் நிறையக் கிடைக்கும்படி அரசாங்கம் செய்யவேண்டும். ஆதலால் மழை பெய்யும்போது நீரை வீணாக்காது, நல்ல அணைகள் பல கட்டித் தேக்கவேண்டும். அவ்விதம் அணைகள் பல கட்டினால், கட்டி நீரைத் தேக்கினால் தம் நாட்டிலே தலைவர்கள் நல்லிசை நிறுத்த முடியும். தம் நாட்டிலே நற்புகழை நிலைநாட்டினால் உலக அரங்கிலும் முதல்நிலை பெறமுடியும். பல ஞாலங் காக்கும் தலைவர்களும் நம்மை நன்கு மதிப்பர்.

இதுபோன்று நம்நாட்டிலே நலமும் வளனும்பெருக நல்ல பல திட்டங்களை அன்றே தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்றால், அதுவே நல்லாட்சி நடத்தத் தமிழர்கள் பெற்றிருந்த திறமைக்கும், அவர்களது அறிவுநுட்பத்திற்கும் சான்று பகரும். இக்காலம் நம் நாடாள்வோர் இவ்வாறு செய்ய முன் வருவார்களா?

அறிவினால் ஆயபயன்

[நாகை. திரு. த. சி. வேலன்]

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். உயர்திணை அஃறிணை என்னும் இப் பாகு பாட்டில், மனிதஉயிர் அல்லாத பிற உயிர்களனைத்தையும் அஃறிணையின்பாற்படுத்தி மனிதனை மட்டும் உயர்திணையாகச் சுட்டியது ஏனெனில், பிற உயிர்களிடம் காணப்படாத பகுத்தறிவு என்னுமோர் அறிவாற்றல் மனிதனிடம் கூடுதலாகக் காணப் படுதலாலேயாம்.

இவ்வுண்மை பலரும் அறிந்ததே ஒரு மனிதன் தவறு செய்கின்றபோது "உனக்கு அறிவில்லையா?" எனவும், சினம் மிகுகின்றபோது 'அறிவு கெட்டவனே' எனவும் அவனைப் பிறர் இடித்துரைத்தலும் இகழ்ந்து பேசுதலும் அறிவின் ஆற்றல் எத்தகையது என்பதை விளக்கப் போதிய சான்றுகளாகும்.

மனிதன், மனிதனுக்குரிய பண்பாடுகளை இழக்கும்போது அவன் தவறிழைக்கிறான் என்று சொல்லுவதைவிட, அவன் மனிதத்தன்மையினின்று விலங்குத்தன்மைக்குப்போகிறான் அல்லது அறிவின்—உண்மையான அறிவின்—ஒரு சிறு பகுதியை இழக்கிறான் என்பதுதான் பொருந்தும்.

மக்களாய்ப் பிறந்த எல்லோருக்கும் அறிவு உண்டு. அறிவில்லாத மக்கள் எவருமிலர். ஒருவரையொருவர் அறிவில்லாதவர் எனப்பேசும் வழக்கம் பொதுவாக மக்களிடையே காணப் படினும், அஃது அறிவில்லாமையைக் குறிக்கும் சொல்லாகாது. அறிவின் திரிபு, அல்லது கெடுதல் என்பதையே குறிக்கும். அறவே அறிவற்ற மக்கள் இருப்பது அரிது. அங்ஙனம் இருப்பின் அவரைப் பித்தர் என்றே அழைத்தல் வேண்டும். இன்றேல் மனிதஉருவில் காணப்படும் ஒருவகை விலங்கு எனல் வேண்டும்.

மனிதக்குரங்கு என்னுமோர் வனவிலங்கைப் பலரும் பார்த்திருப்பர். அவ்விலங்கு தோற்றத்தால்—நடையால்—செயலால்—மனிதனையே ஒத்திருக்கும். அதனைக் காண்போர், "ஓ! இஃதென்ன மனிதனைப்போலவே இருக்கிறதே!" என வியந்து பேசுவர். மனிதன் மாண்புமிக்கப் பிறவியினன்—பகுத்தறிவுடையவன்—தன் மனிதப்பண்பிலிருந்து இறங்கி இழிசெயலில் ஈடுபடும்போது "இவனும் ஓர் மனிதனா?" என வெறுத்துப் பேசுகின்றனர் மக்கள்.

இங்ஙனம் மனிதப்பண்பு என்னும் ஓர் அளவுகோலைக் கொண்டு மனிதனை அளவிடுகிறது அறிவுலகம். உலகப் பேரறிஞர் வள்ளுவர் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ற கருத்துடையவர். இக் கருத்துக்கண்கொண்டே உலகை—உலக மக்களை—அவர்தம் செயலை—நிலையை—நினைப்பை—மற்றுமுள்ள நிகழ்ச்சிகளை—உற்றுநோக்கி ஆராய்ந்தார். அங்ஙனம் ஆராயுங்கால், மக்கள் வடிவிலே நடமாடும் வியப்பான விலங்கினத்தைக் கண்டார்; வியந்தார். "இப்படியும் மனிதப் பிறவிகள் உள்ளனவே! இவரும் மக்கள் தாமோ? இவரைப்போன்ற வியப்பான பிறவியினரை யாம் கண்டிலமே?" என்று தம்மையும் மறந்து பேசுகின்றார் அச் சிந்தனைச்சிற்பி. இதோ, அவர் கூறுவதைக் காண்மின்!

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்." (குறள் - ௧௦௭௧)

எனவே, மனிதன் அறிவென்னும் ஆற்றலால் ஆக்கப்படும் ஓர் உருவம் என்பது ஈண்டு நோக்கற்பாலது. சரி, அங்ஙனமாயின் அறிவுமிக்கோர் அனைவரையும் மனிதர் எனல் சாலும் அன்றோவெனின், அதுவுமன்று. இவ்வுலகில் அறிவுமிக்கோர் பலர் உண்டு; கற்றவர் பலருண்டு; தாம் கற்ற கல்வியின் ஆழத்தை அகலத்தை மக்கள் மன்றத்திலே எடுத்துக் காட்டிப் பேரும் புகழும் பெறுவோர் பலருண்டு; அங்ஙனமே கலை அறிந்தோர், தொழில் அறிந்தோர், இன்ன பிற ஆற்றல் உடையோர் பலரும் இருக்கின்றனர். இவர் எல்லோரும் அறிவுடையோரே. கல்வி கற்காதவராயினும் அறிவு வன்மை வாய்ந்தவர் பலர் உண்டு. ஆனால், இங்ஙனமெல்லாம் இருந்தும்—அறிவு இயக்கப் பெற்றும்—உலகில் தீமைகள் குறைந்தனவா? மக்கள் மக்களாக வாழ முடிகின்றதா? நாகரிக காலம் எனக் கருதப்படுகின்ற இக்காலத்திலும் கொலை, களவு, பகற்கொள்ளை, நாகரிகக் கொள்ளை, வகுப்புப்போர், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் பேதைமை, ஆண்டான் அடிமை என்ற வேறுபாடு, இன்னபிற இருக்கத்தானே செய்கின்றன?

கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் பகுத்தறிவு; பகுத்தறிவின் பயன் பண்புடைமை; பண்புடைமையின் பயன் மனிதன் மனிதனாக வாழ்தல். இந்த உண்மையை அடிப்படையாகவைத்து ஆராய்கின்றபோதுதான், இத்தகைய அல்லல்களுக்கெல்லாம் காரணம், அறிவு அறிவாக இல்லாமையும், திரிபு பெற்ற நிலையிலே வளர்ந்துள்ளது—வளர்ந்து வருகிறது என்ற உண்மையும் புலப்படும்.

நன்மை செய்வதற்கு எங்ஙனம் அறிவு பயன்படுகிறதோ, அங்ஙனமே தீமையைத் திறம்படச் செய்வதற்கும் அதே அறிவுதான் பயன்படுகிறது. அறிவுடைய மனிதன் தன்செயல்கள் அனைத்திற்கும் காரணம் கற்பிக்கிறுன். அச்செயலால் பிறரோ, ஒரு சமுதாயமோ, நாடோ எங்ஙனம் ஒறுக்கப்படுகிறது, அல்லது அதன் விளைவுகள் யாவை? என்பன பற்றியெல்லாம் அவன் நினைப்பதில்லை. தன்னலம் ஒன்றே அவன் குறிக்கோளாகக் கொண்டுவிடுகிறுன். அந்தக் குறிக்கோளை நடுவாகக்கொண்டே அவனது அறிவாற்றல் சுழல்கிறது. அதற்கேற்பத் தனது சட்டத்தையும் திட்டத்தையும் வகுத்துக் கொள்ளுகிறுன். பகுத்தறிவின் துணைகொண்டு நன்மை தீமைகளை ஆராய்ந்தறிந்து தீமையை விலக்கி நன்மையின்பால் செலுத்தவேண்டிய அறிவாற்றலைத் தீமையின்பால் செலுத்துகிறுன். ஆனல், இவ்வடாத செயலை அறிவு என்னும் அழகான திரைபோட்டு மறைக்கின்றுன்.

உலகம் உய்யவேண்டுமானுல்—மக்கள் மக்களாக வாழவேண்டுமானுல்—உண்மையான நாகரிகத்தை நாடி உலகம் முன்னேறவேண்டுமானுல் — இத்தகைய நிலை மாறவேண்டும். அறிவு திரிதல் கூடாது; திருந்தவேண்டும். கூர்மையான அறிவைவிட நேர்மையான உள்ளமே சிறந்தது. சிலவேளைகளில் கூர்மை மிகத் தீமையை விளைவிக்கக்கூடும். இற்றைநாள் அனைத்துலக அரசியல்துறை முதற்கொண்டு தனிமனிதனின் வாழ்க்கைத்துறை ஈருகக் காணப்படும் அல்லல்களுக்கெல்லாம் காரணம் மக்களின் அறிவின்மையல்ல, அறிவின்கூர்மை என்றே கூறவேண்டும்.

கத்தி கூர்மையாக இருக்கவேண்டும். ஆனல், அக் கூர்மை கழுத்தை அறுக்கப் பயன்படக்கூடாது. இனிய கனியை அரிந்துண்ணப் பயன்படல் வேண்டும். அறிவும் அவ்வண்ணமே பயன்படல்வேண்டும். அறிவு ஒரு கத்தி; கல்வி அதனைத் தீட்டிக் கூர்மையாக்கப் பயன்படும் ஒரு சாணைக்கல். அங்ஙனம் தீட்டப்படும் அறிவு நல்ல நோக்கத்தோடு தீட்டப்படவேண்டும். இன்றேல் அறிவு அழிவுக்கே வழிகோலும்.

எனவே, அறிவின் ஆற்றல் அணுவின் ஆற்றலைவிட மிகப் பெரிது. எங்ஙனம் அணுவாற்றல் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் வழிகோல வல்லதோ, அங்ஙனமே அறிவாற்றலும் பயன் கருதி—நற்பயன் கருதி—செலுத்தப்படாவிட்டால் தீமையும், பயன் கருதிச் செலுத்தப்படுங்கால் நன்மையும் பயக்க வல்லதாகும். எனவேதான் அறிவினுல் ஆய பயன் இன்னது என்பதைப் பலவிடங்களில் சுட்டிக்காட்டுகிறுர், வள்ளுவப்பெருந்தகை.

“ அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.” (குறள் - ௩௧௫)

“ அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.” (குறள் - ௧௭௫)

என்னும் குறட்பாக்கள் ஈண்டு கூர்ந்துநோக்கற்பாலன. இன்னா செய்யாமை, வெஃகாமை ஆகியவற்றை வலியுறுத்தப்போந்த அப்பெரியார் ஈண்டும் அறிவையே சுட்டிக்காட்டி அறிவினான் ஆயபயன் என்ன என்று கேட்கிறார். அறிவு அஃகி அகன்று இருந்து மட்டும் பயனில்லை. அறிவு அறிவாக இருத்தல்வேண்டும்; அஃதாவது நன்மையை நாடியதாய் இருத்தல் வேண்டும் என்கிறார்.

மனிதன் மனம் என்னும் மாண்புறு புலனைப் பெற்றவன். அப்புலன் பிறருடைய இன்னலில் இன்பம் காண்பதற்காக ஏற்பட்டதல்ல. அதன் துணைகொண்டு பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் பெற்றி வேண்டும். அதுதான் நாகரிகம்; அதுதான் அறிவு. இதைத்தான் வள்ளுவர் அறிவினால் ஆகும் பயன் என்கிறார்.

அம்மட்டோடு நில்லாது அறிவின் மாண்பை உணர்த்தப் போந்த வள்ளுவர் ‘அறிவுடைமை’ என்னும் அதிகாரத்தில் இவ்வுண்மையைத் தெளிவாக அறுதியிட்டு,

“சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.” (குறள் : ௪௨௨)

என்று கூறுகிறார்.

காட்டாறுபோல் செல்லும் அறிவைப் பண்புடைமை என்னும் பயிர் விளைவுக்குப் பயன்படுத்தாவிட்டால் அவ்வாற்று நீரால் என்ன பயன்?

எனவே, கற்றதனால் ஆயபயன் தூய அறிவுடையராதலும், அத்தூய்மையின் துணைகொண்டு நல்லறிவு நற்செயல் உடையராகத் திகழ்தலுமே மனிதப் பிறவியின் மாண்பாகும்.

குமரிமுனையில் கொடுந்தமிழ்

[செல்வி. எஸ். ஜமலாதேவி]

'வஞ்சி நாடதனில் நஞ்சை நாடென
செந்தமிழ் வழங்கும் தேயம் ஒன்றுளது'

என்ற மனோன்மணீய ஆசிரியரின் மாசறு கூற்றிற்கிணங்கத் தமிழ்நாட்டின் தனிப்பெருஞ் செல்வமாகத் திகழ்வது நாஞ்சில் நாடு. தமிழ் தழீஇய தண்குலம் வாழும் அப்பதியில் தமிழ் அன்றுபோல் இன்றும் தழைக்கிறது; பெருமை சான்ற இலக்கியச் சிந்தனைவள்ளல் வையாபுரிப்பிள்ளை போன்றோரால் அருந்தமிழ் அரும்பி முகிழ்க்கிறது; பழந்தமிழ்ப்பண்பு குன்றாது பொலிந்து பொழிகிறது; சேரலர்கோன் விடுத்த சிலப்பதிகாரச் செந்தமிழால் செழிக்கிறது; மலரும் மாலையும் முகிழ்த்த மாண்பால் மகிழ்கிறது; எனில் அதன் அந்தமில் பெருமை அறியார் யாரே எனப், பைந்தமிழ்ப் புலவரொடு பாடிப் பரவுவோம்.

இத்தகைய நன்னலம் நிறைந்த நாஞ்சிலம்பதியின் அயலே அமைந்தது குமரிமுனை. தமிழ் இலக்கியத்துத் திளைப்போர்க்குக் குமரி என்ற சொல்லினைப் பல்வகையானும் அறியும் வாய்ப்பு ஏற்படுதல் இயற்கையாகும். குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளத் தமிழ்நாட்டின் பெரும்பகுதி நீரிடை மூழ்கியது. அவ்வண்ணம் மறைந்தமையால் இலக்கிய இலக்கணச் செல்வங்கள் அருகலாயின. எனினும் தமிழின்சாயல் தமிழ் நாட்டாரிடையே தவழ்கின்றமையான் இன்றும் இயல் இசை நாடகம் போன்ற துறைகளில் மாறா இன்பம் பெறுதல் இயலுகிறது. ஆனால் காலம் என்பது கறங்குபோற் சுழல்வது. எனவே மேலது கீழா, கீழது மேலா மாறிடும் தன்மை செயற்கையும் அன்று.

குமரிமுனையின் கன்னித்தன்மை காண இன்றும் எண்ணற்ற மக்கள் நாட்டின் பலபகுதியினின்றும் செல்கின்றனர். இறைவன் அடி தொழுவார் சிலர், இயற்கையில் மூழ்குவார் சிலர், நீலக் கடல் அலையிடை நீந்துவார் சிலர், நிமிர்ந்த வானத்தில் நிலவும் காய்கதிர்ச் செல்வனின் வரவு கண்டும் மாலை தோன்றும் மதியத்தின் தண்மை கண்டும் மகிழ்வார் சிலர்.

எந்தையொடு சின்னாள் முன்னர் அக்குமரியந் துறையாடி வருதற்பொருட்டுச் சென்ற என் இளமை உள்ளம் கண்ட

ஒன்றே இவ்வண்ணம் என்னை வரையத் தூண்டியது. அங்குச் செல்வோர் காண்பவைகளில் கல்மண்டபமும் அதனையடுத்த நீர்த்துறையும் சில. நல்லதோர் மண்டபம், பழமைக்கு இலக்கியமாயது; பண்பிற்குச் சின்னமாயது; அயலே தோன்றும் அடியார் மூழ்கி நீராடுந்துறையில் கல்லோவியம் ஒன்று நிற்கின்றது; அக்கல்லிடைத தோன்றிய தமிழ் ஓவியம் என் கண்ணையும், கருத்தையும் கவர்வதாயிற்று; காலச் செல்வனால் தேய்வு பெறினும், அதனை என் தமிழ்க் கண்கள் காண்டல் இயன்றதாயது; கல்லில் அமைந்தவற்றைப் பலமுறை படிக்க முயன்றேன்; பயன் இதுதான்.

‘மாதிறுதீற்த்தம்’ என்பதே என் இளமை உள்ளத்தை உறுத்திய தொடர். என் சிந்தனை சிதறியது. நன்னூலும் நற்றமிழ் இலக்கணமும் நங்கை உள்ளத்தை நலியச் செய்தன. தமிழ் நாட்டிடைத் தோன்றும் கற்றூண், தமிழ்மக்கள் கண்டு களிக்கும் குமரி முனையில் குலவும் கல்லோவியம், தமிழ்ப் பண்பிற்கே ஒவ்வாத தமிழ்த் தொடர், இதனைக் காணும் எத்தமிழ் உள்ளமும வருந்தும். இலக்கணம் அல்லது சொல்லாக்கம் தமிழ்மொழிக்கு மிக மிகத தேவையாகும். பல்லாயிர மக்கள் யான் கண்ட கல்லுருவைக் கண்டிருத்தல் இயலும். எனினும் அவர் உள்ளம் இதுகாறும் ஒன்றும் செய்திலவே என எண்ணி வருந்தினேன். ஏழைச் சிறுமியேன் நொந்து என்ன பயன்? சொல்லின்செல்வர் பலர் இக்கல்லோவியத்தைக் காணுறும் நாள் என்நாளோ? **மாதிறுதீர்த்தம்** எனும் தொடர் **மாதர் தீர்த்தம்** என அமையலாம். எனில், நாகிள **நங்கையர் நீராடும் துறை** எனப் பொருள்படும். அன்றி **மா திரு தீர்த்தம்** என அமையின், **நற்பேறு நல்கும் நீர்நிலை** என ஆகலாம். மேலும் தீர்த்தம எனும் சொல் செம்மையான தமிழ்த் தன்மைத்தோ என்ற ஐயமும் எழல் இயற்கையே. ஆனால் பல யாண்டுகளின் முன்னர் வரைந்த ஓவியச் செல்வனின் உள்ளத்தே எத்தகைய கருத்தலைகள் தோய்ந்தனவோ என்றறியும் பெருவிருப்பு என் உள்ளத்தே நின்று சுடர்விடுகிறது. அவ்வொளி நற்றமிழ் அறிஞர் உள்ளத்தும் பரவின், கல்லோவியம் நற்றமிழ் ஓவியமாகலாம். கொடுந்தமிழ் குலவு செந்தமிழாதலும் சாலும்.

தலையீந்த தமிழன்

[திரு. தா. இளந்திரையன்]

கடை ஏழு வள்ளல்கட்குப் பின்பிறந்த கொடைவள்ளல் குமணன். தலையீந்த தமிழன் எனத் தனியாகப் புகழ்ப்பெற்ற இவ்வரசன் குதிரைமலை என்னும் முதிரைமலையை ஆண்டான். இவ்வரசன் கொடை என்னும் நீரைத் தமிழ் என்னும் புலமை வனத்தில் பாய்ச்சி, புலவர் எனனும் செடியை தழைக்கச் செய்து தமிழென்னும் பூவை மலரச் செய்தான்.

குமணன் பரிசளிப்பதெல்லாம் தமிழ்மொழி தழைக்கவும் கற்றுவல்ல பெருமக்களை ஆதரிக்கவும், என்பதை மறந்து, அண்ணனால் அரண்மனைச் செல்வம் செலவழியும் என எண்ணங் கொண்ட இளங்குமணன் தன் தமையனை நாட்டினின்று நீக்க எண்ணங் கொண்டான். இதையறிந்த குமணன் காட்டிற் சென்று கரைந்து உறைவானாயினன்.

ஆவூர் மூலங்கிழார் என்னும் பெரும் புலவரின் மகனார் பெருந்தலைச் சாத்தனார் என்னும் தமிழ்ப்புலவர் தம் தந்தை சேர்த்துவைத்த பொருள் செலவழிந்தமையால் ஒரு காவலரை நாடிச் சென்று பரிசுபெற விரும்பிக் குமண வள்ளலிடம் சென்றார். முதிரைமலையை அடைந்தவுடன் இளங்குமணனால் குமணவள்ளல் காடு சென்றான் என்பதை யறிந்து தம் வறுமையின் மிகுதியால் காடுசென்றாயினும் குமணனைக் கண்டு பரிசில்பெறக் கருதிக் காடுசென்று குமணனைச் சந்தித்தார்.

"தமிழ்க் களஞ்சியம் எனப்போற்றப்படும் குன்றாக் கொடை வள்ளலே! புலவர், பாணர், கூத்தர் போன்றவர்களது வறுமையைத் தீர்க்கும் வற்றா நதியே! உணவில்லாமல் மெலிந்த என் மனைவி கண்களிலிருந்து சொட்டும் நீரை, பாலாக இருக்கக் கூடாதா என ஏங்கி மார்பைச் சுவைத்துக் கொண்டிருக்கிறது பாலுண்ணும் குழந்தை. அரசு என்னும் முடியைத்தாங்கிக் கோலைத்தாங்கி வீரமென்னும வாளை ஏந்திக்கொண்டிருந்த தாங்கள் காடுசென்றீர் எனக்கேள்விப்பட்டு, என் வறுமையைப் போக்கிக் கொள்ள தங்களிடம் பரிசுபெற வந்துள்ளேன்" எனப் புலவர் தன்மொழியை இன்மொழியால் புகன்றார்.

புலவரின் வறுமை நிலையை யறிந்த வள்ளல், "புலவரே! யான் நாட்டிலிருந்து என்னை வேண்டியோர்க்கு வேண்டின

தருங்காலத்து நீர் வந்தீரில்லை, யான் நாடுதுறந்து காட்டின் கண் உறையுங்கால் வந்தீர். இப்பொழுதும் நீர் பரிசுபெற நல்ல வழி இருக்கிறது. புலவரே! என் அருமைத் தம்பி என் தலையை வெட்டிக்கொண்டு வருபவருக்குத் தருந்த பரிசளிப்பதாகப் பறையறைவித்திருக்கிறான். நீவிர் தயவுசெய்து இந்த வாளினால் என் தலையை வெட்டி எடுத்துக்கொண்டுபோய் என் தம்பியிடம் கொடுத்துப் பரிசுபெறுக! இவ்வாய்ப்பைக் கொடுத்த என் தம்பியும், இவ்வாய்ப்பைப் பெற்ற நீரும் வாழ்க!!” என்று தன் கையிலிருந்த வாளைப் புலவரிடம் ஈந்தான்.

“பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப்போன்ற புலவர்களுக்குத் தலையீந்து வாழ்ந்த வள்ளல்களால்தான் உலகம் நன்னிலையில் உள்ளது” என எண்ணங்கொண்டு புலவர் தந்த வாளை வாங்கிக் கையிலேந்தி எங்ஙனமாயினும் இவ்வள்ளலை அரசனாக்கவேண்டும் என எண்ணிய புலவர் இளங்குமணனிடம் விரைந்து சென்றார்.

புலவரைக் கண்ட இளங்குமணன், ‘இவர் நம் அண்ணனை வெட்டவே வந்துள்ளார்’ என்னும் மகிழ்ச்சியால் புலவரை வரவேற்றான். உடனே புலவர் இளங்குமணனை நோக்கி, “யான் பாடிய பாவலருக்கு யானையைப் பரிசிலாகத்தரும் குமணனைக் காட்டிலே கண்டு என் வறுமையைக் கூறினேன். அங்குப் பரி சிலாகத் தருவதற்கு அவனைக் காட்டிலும் சிறந்த பொருள் இன்மையால் தலையை வெட்டி எடுத்துக்கொள்ளும்படி வாளீந் தான். இத்தகைய செயலால் அவன் கடை ஏழு வள்ளல்களி லும் மேம்பட்டான் அத்தகைய சிறந்த நின் தமயனைக் கண்டு நின்னையும் காண வந்துள்ளேன்!!” என வீரத்துடன் புகன்றார்.

புலவர் கூறியவைகளைக் கேட்ட இளங்குமணன் மன மிரங்கித் தன் தமையனை அழைத்து வந்து அரசனாக்கினான். புல வரும் பரிசு பெற்றுச் சென்றார்.

‘..............................
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
..............................’ (புறம்: ௧௬௫)

ஆக்குக தமிழை ஆட்சிமொழியாய் !

[திரு. தி. நா. அறிவுஒளி.]

தமிழகத் தீரே ! தமிழகத் தீரே !
தமிழினை ஓம்பாத் தகைசால் பெரியீர் !
தாய்மொழி யாம் தமிழ் தண்ணுயிர் போற்றித்
தாயகம் புரக்காத் தண்ணரு ளோரே !
தமிழகம் தாழவும், தமிழ்மொழி குலையவும்,
நமைச்சூழ் பகையை இமைப்பொழு தெண்ணு
வள்ளற் றன்மை வாய்த்த நல்லோரே !
உள்ளத் துறுதி ஒன்றும் இல்லா
வெள்ளை மனத்தீர் ! வெறுங்கதை பிதற்றிக்
கொள்ளை விடுகின் றீரே யந்தோ !
ஊரும் பேரும் ஒன்றும் அறியாச்
சீரில் உளறல், செய்மொழி யெல்லாம்
ஆள்மொழி யாக ஆவதும்; செருக்கி
நாணில் மகளென நடப்பதும் காண்மின் !
இன்று பிறந்த இந்தி மொழியது
பண்டை மொழிகளின் பண்பிடம் பற்றி
ஆள்மொழி யென்று ஆர்ப்பதைக் கண்டும்
ஆண்மை சற்றும் அறியாப் பேதை
மானக் கிடக்கும் மதிப்பும் ஏனோ ?
எழுமதி நாடே ! எழுமதி நாடே !
தமிழகத் தீரே ! தமிழகத் தீரே !
ஆக்குக தமிழை ஆட்சி மொழியாய்
தேக்குக தமிழர் திருவை ஈண்டே
ஆக்குக தமிழைக் கல்வியில் முதலாய் !
தாய்மொழி ஒன்றே தக்கது கற்க
தாய்மொழி கலையகப் பாடம தாகுக !
திருக்குறள் ஆட்சித் திருநூல் ஆகுக !
திருக்குறள் தமிழர் திருமறை ஆகுக !
பல்கலைக் கழகம் பட்டி மன்றம்
அஞ்சல் நிலையம் அறங்கூ றவையம்
பாராள் மன்றம் ஊராள் கழகம்
சீரார் கோயில் செயலகம் எங்கும்
செந்தமிழ் மொழியே முழங்கிடல் வேண்டும் !
இன்னே வேண்டும் இதற்கு ஆக்கம்

ஞாலம் தோன்றிய நாளி லிருந்து
காலம் கடந்தும் கற்புக் கடமை
சாலச் செழித்து, சார்புகள் வளர்த்துப்
பொம்மென வளரும் மேதை மொழியாம்
நம்முயிர்த் தமிழ்மொழி நனிநல் லாட்சிச்
செம்மொழி யாகச் செய்வினை புரிவோம்
ஆருயிர் அளித்தும அரும்பொருள் இழந்தும்
சீருடல் அளித்தும் செவ்வுரை கொடுத்தும்
எவ்வழி யேனும எந்தமிழ் வாழச்
செவ்விதி னெழுக செந்தமிழ் நாடே!
தமிழாள் மொழியாய் ஆவது தடுக்கும்
தமிழ்ப்பகை யாளரைத் தண்ணரு ளின்றி
தகைதல் கடனாம்; தக்கதும் அதுவே
"வெளவலுஞ் சொற்கள் விரிதமிழ் மொழியில்
நல்லன இல்லை; நாளை வளரும்
அந்நாள் செந்தமிழ் ஆகுக ஆள்மொழி"
என்றிடுங் கயவர்க் கேற்ற விடையினை
இன்னே யளிப்போம்: "தமிழினுஞ் சீரிய
வளமார் மொழியிந் நாவலந் தீவினில்
உளமொழி யாவினும் ஒன்றுமே இல்லை;
உண்மை; இதுபொய் புனைமொழி அன்று;
நுண்கலைச் சொற்கள் எண்ணில உடையது;
இன்னும் ஆக்கலாம்; இனியும் சேர்க்கலாம்"
பன்னிப் பன்னிப் பைந்தமிழ் வளர்ச்சியைக்
கொன்னே தடைசெயல் கோடி பிழைசெயும்
போரும் பூசலும் புகையா முன்னே
சீராய்த் தமிழ்மொழி ஆட்சியை எய்தப்
பாராள் கின்றார் பணிசெயல் வேண்டும்
மாறு முறைசெய் மாண்குடி யரசெனில்,
தமிழ்க்கலை தழைய, தமிழ்ப்பண் புயர
தமிழர் வாழ்வு அமிழ்தெனச் சிறக்க
இன்னே தமிழகப் பொதுமொழி தமிழாய்
நன்றே யாக்கி நற்புகழ் அடைகவே!

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L, M. S. S. A., M. R. A. S (LOND,)]

(சிலம்பு உகூ; பரல் கக, ௫00-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னோரன்ன பற்பல ஏதுக்களைக் கொண்டு இன்று நிலவும் தமிழ் எழுத்துக்களும் ஒரு காலத்தில் சித்திர எழுத்துக்களாயிருந்து பின்னர் வரிவடிவங்களைப் பெற்றுள்ளனவா என்று ஆராய்வது இயற்கை அறிவுக்குப் பொருத்தமானதே.

தமிழ் எழுத்துக்கள் சித்திரங்களிலிருந்து தோன்றியிருக்கலாமென்ற எமது எண்ணத்தை 22-1-1950-இல் திருநெல்வேலி அருணகிரி இசைக்கழகத்தில் தமிழ்த்திருநாள் திருவிழாத் திறப்புரையில் குறிப்பித்துள்ளோம். "பழந்தமிழரும் முருகன் முக்கண்ணன் வணக்கமும்" என்னும் எமது நூலிலும் இதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மேற்காட்டியபடி, இவண் எடுத்துக்கூறிய அடிப்படையான குறிப்புக்களை மனதில் நன்கு பதித்துக்கொண்டு, தமிழ் எழுத்துக்களின் தற்காலிக உருவங்களை மிகக் கூரிய முறையில் ஆய்ந்து சிந்திப்போமாக.

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சுட்டுகின்ற உட்பொருளை உற்றுநோக்கி ஆய்வதற்கு முன், அவ்வெழுத்துக்களுக்கு வடிவம் இருந்தனவா என்பதைத் தெளிந்து உறுதிப்படுத்துவது எமது முதற்கடமையாகும். பழந்தமிழ் நூல்களில் இதைப்பற்றிய சான்றுகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதைச் சிந்திப்பாம். தமிழ் நூல்களிலே மிகப் பழமையான தொல்காப்பியத்தில் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களைப்பற்றிய குறிப்புக்கள் பற்பல இடங்களிற் காணப்படுகின்றன. அவற்றிற் சிலவற்றை இங்கு எடுத்துரைப்பாம்.

தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள், உயிர்-12, மெய்-18 ஆக முப்பதோடு, சார்பு எழுத்துக்கள் மூன்று உள்ளன என்பதை நாம் நினைப்பூட்டிக்கொள்வோமாக. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் இரண்டாவது நூற்பாவில் ஆசிரியர் சார்பெழுத்துக்களைப்பற்றி எடுத்துரைக்கின்றனர். அஃதாவது:—

"அவை தாம் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன" இந்நூற்பாவில் "ஆய்தம்" என்னும் எழுத்தை எடுத்துக்கொள்வோம்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என மூன்றும் சார்பெழுத்து. சார்பெழுத்து என்பது தனித்து நிற்கமுடியாத எழுத்து; மற்றொரு எழுத்தைச் சார்ந்தே நிற்கும். சார்ந்தே இயங்குவதால் சார்பெழுத்து என்றழைக்கப்படும். சார்பெழுத்து மூன்றில் ஆய்தம் என்னும் எழுத்தைத்தான் பொதுவாக நாம் நன்கறிவோம். இதை நாம் "அஃகென்ணு" என்று அழைப்பது உண்டு. அடுப்புக்கட்டி மூன்று குமிழ்களை (Knob) உடையது போல, ஆய்தம் என்னும் எழுத்து மூன்று புள்ளி (வட்டம்) களால் ஆகிய உருவத்தால் (ஃ) குறிக்கப்படுகிறது. மூன்று புள்ளிகளுடையபடியால், ஆய்தவெழுத்தை தொல்காப்பியர் 'முப்பாற்புள்ளி' என்றழைத்தனர் போலும்-[சிவஞான முனிவர் போன்ற இலக்கணப் புலவர் ஏறுகள் (சிங்கங்கள்) இந்நூற்பாவிற் குறிககப்பட்ட மூன்று சார்பெழுத்துக்களும் மூன்று புள்ளி களாற் குறிக்கப்படுகின்றனவென்று கூறுகின்றனர். இது சிறந்த ஆராய்ச்சிக்குரியது. எழுத்துக்களைத் தனித்தனியாய் ஆராயும் பொழுது விரிந்த முறையில் இது சிந்திக்கப்படும். நிற்க]

தொல்காப்பியர் காலத்தில் ஆய்த எழுத்துக்கு ஒரு தனி உருவம் (முப்பாற்புள்ளி) ஏற்பட்டு இருந்தது என்பது இங்கு வெளிப்படை.

தொல்காப்பியத்திலேயே, மற்றொரு நூற்பாவைப் பார்ப்போம்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
(எழுத்து - ௧௫)

மெய்யெழுத்தின் தன்மை என்னை? அதுதான் ஒரு புள்ளியைப் பெற்றுநிற்பது. நாம் நடைமுறையில், மெய்யெழுத்துக்களுக்கு, ஒரு குத்துப் போடவேண்டுமென்று சொல்கிறோம். குத்து, புள்ளி, குறி எல்லாம் ஒரே பொருளையுணர்த்தும் கிளவிகள் (சொற்கள்). தொல்காப்பியச் சூத்திரங்கள் மிகக் கடினமானவை என்று மயங்குபவர்கள் இந்த நூற்பாவைச் சிறிது நோக்குக. எவ்வளவு எளிமை! நிற்க, மெய்யெழுத்துக்களுக்கு ஒரு புள்ளி உண்டென்பது இதினின்றும் விளங்குகின்றது.

இதையும் பொருள்நிறைந்த மற்றொரு நூற்பாவையும் சிந்திப்பாம்.

"புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே" (தொல் - எழுத்து - ௧௭.)

இதன் பொருள்: மெய்யெழுத்துக்களோடு அகர உயிர் புணருமபொழுது (சேரும்பொழுது) அவைகளிலுள்ள புள்ளிகள்

நீங்கிவிடும்: (எ - டு.) க்+அ=க; ஆனால் அவை அகரத்தைத் தவிர மற்றைய உயிர்களோடு (ஆ, இ, ஈ, உ, ஊ-....) சேரும் பொழுது, மெய்யெழுத்துக்களின் உருவம மாறிவிடும். (எ - டு.) க்+உ=கு; க்+ஔ=கௌ.

இந்த நூற்பாவினின்றும், மெய்யெழுத்துக்களுக்கு வெவ் வேறு உருவங்கள் ஏற்பட்டிருந்தன என்பது உள்ளங்கை நெல் லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா?

இம்மாதிரியே, இன்னும் பற்பல நூற்பாக்களில் எழுத்துக் களின் வடிவங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருவதை எடுத்துக் காட்டலாம். அவைகளிற் சில :—

(1) உட்பெறு புள்ளி (2) ங ஞண நமன என்னும் புள்ளி (3) மஃகான் புள்ளி (4) யரழ என்னும் புள்ளி (5) அகரத் திமபர் யகரப் புள்ளி (6) உடம்படு மெய்யின் உருவு கொளல் வரையார்.

இங்ஙனமாக, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தோங்கிய தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களின் உருவங்களை நமக்கு எடுத்துக்காட்டினராயின் பண்டைக்காலத்தில் தமிழ் எழுத்துக் களுக்கு வெவ்வேறு வடிவம் இருந்ததென்பதில் ஐயமுண்டோ? தொல்காப்பியருக்குப் பின்னர் வந்த தமிழ் இலக்கண ஆசி ரியர்கள் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிக் கூறும் குறிப்புக் களைச் சற்று ஆராய்வாம்,

நன்னூல் பவணந்தி முனிவர் எழுதிய இலக்கணம். ஒரு சில ரால், இது வழிநூல் என்றும், வேறு சிலரால், இது சார்புநூல் என்றும கூறப்படுகின்றது. ஆனால் ஒருவழிநூல் முதல் நூலின் அடிப்படையான கொள்கைகளையே தகர்த்துவிடுமாயின், அது 'முடிபு ஒருங்கு ஒத்தது' (பொருள் முடிபு முழுவதும் ஒத்தது) என்று எங்ஙனம் கூறுவது? அந்நூலுக்கு வழிநூல், சார்புநூல் என்னும் பெயர் பொருந்தவே பொருந்தாது. ஐயாயிரம் (பதி னாயிரம) ஆண்டுகளாக வழங்கிவந்த தமிழ் நெடுங்கணக்கில், **சார்பெழுத்துக்கள் மூன்றே** என்று தொல்காப்பியர் வரை யறுத்து எடுத்தோதினர். ஆனால் பவணந்தியோ சார்பெழுத்தைப் பத்தாக்கிவிட்டனர். நன்னூலை வழிநூல் சார்புநூல் என்று அழைப்பது எங்ஙனம்? ஆயினும் தமிழ் இலக்கணத்தின் சில பாகங்களை மிக எளிமையாக்கித் தந்தது நன்னூலேயாகும். அதில் எங்ஙனம் கூறுகின்றதென்பதை இவண் நோக்குவாம்:

> '**தொல்லை வடிவின** எல்லா எழுத்தும் ஆண்டு
> எய்தும் எகர ஒகரமெய் புள்ளி.' (நன்னூல்: கூஅ)

நம்முடன் வாழ்ந்த இலக்கண விளக்க ஆசிரியர்கூட,

"எழுதப்படுதலின் எழுத்தே........" என்றார்.

எழுத்தென்றழைத்ததற்குக் காரணம் எழுதப்படுவது, என்றார். எழுதப்படுவது எழுத்து; யாதாமொரு உருவமுமில்லாமல் எழுத முடியுமா? ஆதலின், எழுத்துக்களுக்கு உருவம் இருந்திருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

இற்றைக்கு ஏறக்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட "வீரசோழியம்" என்னும் இலக்கண நூலைப் பார்ப்போம்: இந்நூலில் சந்திப்படலம்—3-ஆம் நூற்பாவில் "எகர ஒகரமெய்யிற் புள்ளிமேவும்" என்று ஆசிரியர் பொன்பற்றி காவலர் புத்தமித்திரனார் கூறினார். இதற்கு "எகர ஒகரங்களும், மெய்கள் பதினெட்டும் மேலே புள்ளி பெற்றுப் புள்ளி எழுத்தென்னும் பெயரவாம்" என்று பெருந்தேவனார் உரையெழுதி உதவினார்.

மேற்காட்டியபடி, தமிழ் இலக்கண ஆசிரியர்கள் எல்லாரும் தமிழ் எழுத்துக்களுக்குத் தனி உருவங்கள் பண்டைக் காலங்களிலிருந்து (தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரேயிருந்து) நிலவி வருகின்றன என்பதை ஒருமித்து உறுதிப் படுத்துகின்றனர்.

மேலும், தமிழ் இலக்கணங்களில் (தொல்காப்பியம் உள்பட) முதற்பாகம் எழுத்ததிகாரமேயாகும். எழுத்து என்னும் சொல் மங்கலமொழியென்பது பழந்தமிழ் இலக்கிய இலக்கண மரபு. எழுத்து என்னும் சொல் மிகமிகத் தொன்மையானது. இது பலலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி நிலவும் சொல்லாதலின், அது ஏறக்குறைய இருபத்துநான்கு பொருள்களில் வழங்கக்கூடியதொரு சிறந்த சொல்லாயிற்றே!

இதுகாறுங் கூறியவற்றால், தமிழ் எழுத்துக்கள் சித்திரங்களாய் எழுதப்பட்ட எழுத்துக்களினின்று தோன்றியிருக்கலாம் என்று ஆராய்வது சாலப்பொருத்தமென்பதும், தொல்காப்பியர் காலத்துக்குப் பற்பல ஆண்டுகளுக்கு முன்னரேயே, தமிழ் எழுத்துக்கள் வெவ்வேறு உருவங்கள்பெற்று வழக்கில் இருந்து வந்தன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இனி, தமிழ் எழுத்துக்கள் தமிழகத்தில் எத்தனைகாலமாய் நிலவுகின்றன என்பதும், இன்று நிலவும் தமிழ் எழுத்து உருவங்களுக்கும் பண்டையத் தமிழ் எழுத்து வடிவங்களுக்கும் வேறுபாடு உளவா? உளவாயின், எத்தகைய வேறுபாடு என்பதையும் அடுத்து ஆராய்வாம்.

'பேபர்' என்னும் பூச்சிப்புலவர்

[திரு. என். கே. வேலன்]

ஜீன் என்ரி பேபர் என்னும் அறிஞர் இயற்கைப் பொருள் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர். இவர் பூச்சி புழுக்களின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை முறை, இறப்பு முதலியவற்றைக் கூர்மையாக ஆராய்ந்து பார்த்து அவற்றின் நுட்பங்களைக் கண்டுபிடித்தவர். எல்லா உயிர்களும் ஆண்டவனது பிள்ளைகள் தாம் என்ற பெருநோக்குடன் சின்னஞ்சிறிய பூச்சியையும் தம் உடன்பிறப்பாகவே கருதி அதனிடம் இரக்கம் காட்டியவர்.

இப் பெரியார் 1823 ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டில் லியான்ஸ் என்னும் ஊரில் தோன்றினார். இவரின் தந்தையார் மிகவும் எளிய நிலைமையில் ஒரு சாப்பாட்டு விடுதியை நடத்தி வந்தார். படிப்பு வாசனை இல்லாத ஏழைக்குடும்பத்தில் பிறந்தும் பேபர் சிறந்த அறிவாளியாக இருப்பதைக்கண்டு ஊரில் உள்ளவர்கள் வியப்படைந்தனர். இளம் வயதிலேயே அவருக்கு இயற்கை ஆராய்ச்சியில் நாட்டம் சென்றது.

பிற் காலத்தில் தாம் எழுதிய ஓர் ஆராய்ச்சி நூலில் அவர் கூறுவதாவது :—

"நான் மற்றப் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு இருக்கும்பொழுது ஒருநாள் பட்டுப் பூச்சியின் அழகைக்கண்டு மெய்ம் மறந்துபோனேன். அழகிய செடி கொடிகளும் மலர்களும் பறவைகளும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவைகள் என்னைக்கண்டு நகைப்பதுபோலவும் என்னுடன் பேசுவது போலவும் எனக்குத் தோன்றின. படைப்பின் அருமையைப் பற்றி எந்த நேரமும் கனவு கண்டுகொண்டிருந்தேன்," எனக் கூறியுள்ளார்.

"நம்மைச் சுற்றிலுமுள்ள மிகச்சிறிய பொருள்களிலும் கூடப் பல நுட்பங்கள் அடங்கி இருப்பதைக் கண்டேன். இவைகளைப்பற்றி மேலும்மேலும் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் எனக்கு உதித்தது" என்று மற்றோரிடத்தில் கூறுகின்றார்.

பேபர், சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது அவர் பூச்சி புழுக்களைப் பிடித்துக்கொண்டு விளையாடியதாகவும், அவர் வீண்

பொழுது போக்குவதாக எண்ணி அவரின் அன்னையார் அவரை அடித்துத் துன்புறுத்தியதாகவும் கூறப்படுகின்றது. பேபர், முதலில் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். சம்பளம் கொடுக்க வகையின்றி ஆசிரியருக்கு விறகுக்கட்டுக்களைக் கொண்டுபோய்க் கொடுத்துப் படிக்க வேண்டி இருந்தது. பன்னிரண்டு ஆண்டுகள் நிரம்பியபோது அடுத்த ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். தமது ஓய்வு நேரங்களில் மாதா கோவிலில் வேலைசெய்து அதனால் கிடைத்த பொருளைப் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிப் படித்து வந்தார்.

பேபரின் குடும்பம் வறுமையால் வாடி இருந்தது. பெற்றோர்கள் வயிறு பிழைக்க ஊரூராக அலைந்து திரிந்தனர். பேபரின் படிப்பும் நிறுத்தப்பட்டது. அவர் பழங்களை விற்று அதனால் வரும் ஊதியத்தைப் பெற்றோரிடம் கொடுத்து வாழ்க்கை நடத்திவந்தார். நல்ல வேளையாக சிறிது காலத்திற்குப்பின் பேபருக்கு இலவசக்கல்வி கிடைத்தது. பழம் விற்பதைவிட்டு மீண்டும் கல்விகற்கத் தொடங்கினார்.

அக்காலத்தில் தாம் நடத்திய எளிய வாழ்க்கையைப்பற்றி அவர் கூறியதாவது :—

“கன்றுக்குட்டிகளுடனும் கோழிக்குஞ்சுகளுடனும் நான் வாழ்ந்து வந்தேன். ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் குஞ்சுகளும் எனக்கு இன்பம் ஊட்டின. இயற்கைப் பொருள்களினின்றும் ஏதோ ஓர் ஒளி வீசுவதுபோல் எனக்குத் தோன்றிற்று. ஒருநாள் சூரியனைப் பார்த்துக்கொண்டே நெடுநேரம் நின்றுகொண்டிருந்தேன். விளக்கை நாடிய விட்டிலைப்போன்று துடித்தேன். வாயைத் திறந்தபடி கண்களை இறுக மூடிக் கொண்டேன். கண்களைத் திறக்கும் பொழுதெல்லாம ஞாயிற்று ஒளியின் இன்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. கண்களைத் தந்த ஆண்டவனைப் போற்றினேன். உலகிற்கு வெப்பத்தையும் ஒளியினையும் தரும் ஞாயிறு பசிப்பிணியையும் போக்கக் கூடும் எனில் இவ் உலகம் ஓர் இன்ப உலகமாக மாறிவிடும் என எண்ணினேன்” என்று தமது நூலில் வரைந்துள்ளார்.

படிப்பு முடிந்தவுடன் பேபர், ‘கார்பெண்டிராஸ்’ என்னும் இடத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக வேலைபார்த்து வந்தார். ஆண்டு ஒன்றுக்கு இருபததொன்பது பவுன் சம்பளம் கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப்பின் ‘அசாக்கியோ’ என்னும் கல்லூரியில் பேராசிரியராக அமர்ந்து இயற்கைப்பொருள் பாடங்களைக் கற்பித்து வந்தார். ஓய்வுநேரங்களில் தமது

ஆராய்ச்சிகளை நடத்துவது வழக்கம் ஒரு சிறிய வெட்டுக்கிளி யைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதானாலும் சிறிதும் சலிப்பின்றிப் புதர்களின் நடுவில் மறைந்திருந்து அதன் வாழ்க்கையை அப் படியே படம்பிடித்துக் காட்டுவார். தமது ஆராய்ச்சியின் பொருட்டு இரவில் உறக்கம் விழிப்பதாலும் பனியில் நனைவதா லும் பேபருக்குக் கொடிய காய்ச்சல் வந்தது. ஆண்டவன் அருளால் தப்பிப்பிழைத்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின் 'அவிக்னன்' என்னும் இடத்தி லுள்ள பள்ளிக்கூடத்திற்கு அவரை மாற்றிவிட்டனர். இங்கு நீண்டகாலம் வேலைபார்த்து வந்தார். இரவு நேரங்களில் பிள்ளை களுக்கு இலவசமாகப் பாடம் கற்பித்து வந்தார். பிறகு வேலையை விட்டு அகன்று தமது சொந்த ஊருக்கு வந்துசேர்ந்தார். பல ஆண்டுகளாக அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்த ஆராய்ச்சிகளை எல்லாம் பல நூல்களாக வெளியிட்டார். இதில் அவருக்கு ஏராளமான பொருள் கிடைத்தது. கல்வி அமைச்சா 'விக்டர்' துரை என்பவர் அவரைப் பாரிஸ் நகருக்கு வரவழைத்துச் சிறந்த பட்டங்களை வழங்கினார். மூன்றாவது நெப்போலியன் என்னும் மன்னரிடம அவரை அறிமுகப்படுத்திவைத்தார்.

பேபர், பாரிஸ் நகரிலிருந்து திரும்பிவந்து தமது ஆராய்ச்சி களைத தொடர்ந்து நடத்திவந்தார் ஒரு பூச்சியைப பற்றி ஆராய்வதென்றால் இரவும் பகலும் அதன் போக்குவரவுகளைக் கூர்மையாகப் பார்தது அதன் உட்கருத்தைக் கண்டுபிடித்து விடுவார். பல நாட்களாக ஆராய்ச்சிசெய்து தவறிப் போய்விட் டாலும் சிறிதும் கலங்காமல் மீண்டும் மீண்டும முயற்சிசெய்து வெற்றியடைவார். தொடர்ச்சியாகப் பன்னிரண்டு மணி நேரம் கடும வெயிலில் வேலைசெய்வார். அவர் காடு மேடெல்லாம் சுற்றி அலைவதைக்கண்டு அவருக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற் பட்டிருப்பதாகச் சிலர் எண்ணினா. அவர் ஆராய்சசியில் ஈடுபட் டிருக்கும்பொழுது எதிரில் வருபவர்களைப் பார்ப்பதும் இல்லை. பேசுவதும் இல்லை. பித்துப்பிடித்தவர்போல் காணபபட்டார்.

அவருக்கு உலகமே ஒரு நாடகமேடையாகத் தோற்றம் அளித்தது சிலந்திப் பூச்சி வலை வீசுவதும ஈக்களை ஏமாற்றிப் பிடித்துத் தின்பதும் ஓர் இயற்கைக்காட்சியாக அவருக்குத் தோன்றவில்லை. இருப்பதா அல்லது இறப்பதா என்னும் வாழ்க்கைப் போராட்டத்தை அவர் சிலந்திக் கூட்டில் கண்டார். மாரிக் காலத்திற்கு வேண்டிய உணவை முன் எச்சரிக்கையுடன் தேடிவைக்கும் ஒரு சிற்றுயிரின் ஊக்கததையும் சுறுசுறுப்பை யும் கண்டு வியந்தார். பூச்சி புழுக்கள் மனிதனைக் காட்டிலும் திறமையுடன் வேலை செய்வதைக்கண்டு வியப்புற்றார். அவற்றின்

இன்பங்களையும் துன்பங்களையும் வாழ்க்கை வரலாறுகளையும் தமது நூல்களில் சித்திரித்துக் காட்டியுள்ளார். சித்திரம் எழுதுபவர் அந்திப்பொழுதில் செக்கர்வானத்திற் காணும் ஓர் இன்பத்தினைப் பூச்சி புழுக்களின் வாழ்க்கையில் பேபர் கண்டார். அவர் உலாவச்சென்றாலும் திரும்பி வந்தவுடன் தாம் கண்ட உண்மைகளைக் குறித்து வைப்பது வழக்கம். அவர் எந்தப் பொருளானாலும் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து ஏதேனும் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பார்.

ஒருவகை வண்டு சாணி முதலிய கழிவுப்பொருள்களை உருண்டையாக்கி அதனை உருட்டிச் செல்வதை நாம் சில வேளைகளில் காண்கிறோம். இந்தச் சாணி உருண்டையை வட்ட வடிவமாக உள்ள ஞாயிற்றின் அடையாளம் என்றும் அதனை உருட்டிச் செல்லும் வண்டு கடவுள் தன்மை உடையதென்றும் எண்ணிச் சில நாடுகளில் மக்கள் அதனை வழிபட்டு வந்தனர். அந்த வண்டின் வடிவத்தில் நகைகளைச் செய்து அணிந்துகொண்டனர். இதனைப்பற்றிப் பேபர் ஆராய்ச்சி செய்துபார்த்ததில், வண்டு தனது முட்டைகளைச் சாணியில் மறைத்துவைத்து உருட்டிச் செல்வதெனவும் தனக்கு வசதியான இடம் கிடைத்தவுடன் முட்டைகளைப் பத்திரப்படுத்தி வைக்கின்றதென்றும் கண்டுபிடித்தார்.

பேபர், தாம் கண்ட உண்மைகளை மிகவும் எளிய நடையில் தெளிவாக எழுதிவந்தார். பூச்சிகளைப்பற்றிய பெரிய ஆராய்ச்சி நூல் ஒன்று பத்துப் பக்கங்களாக வெளியிடப்பட்டது. சிலந்தியின் கூட்டில் நடக்கும் போரை இராமாயணப் போராகவும் பாரதப் போராகவும் சித்திரித்துக் காட்டுகின்றார். தேளைப் பற்றிய ஆராய்ச்சி அரிச்சந்திர புராணமாக வளர்கின்றது. தேளின் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதைக் கண்டார். பெண்தேள் ஆண் தேளைவிட அளவில் பெரியது. ஆணும் பெண்ணும் முதலில் கூடிக்குலவுகின்றன. கைகோத்து உலவுகின்றன. பின்னர் புதிய வீட்டைத் தேடிச் செல்கின்றன. மனதிற்கு உகந்த இடமாகக் கிடைத்தால் இரண்டு தேள்களும் உள்ளே செல்கின்றன. மறுநாள் காலையில் மணமகன் பிணமாகக் காட்சி அளிக்கின்றான். பெண் தேள், தன் கணவனையே முதல் உணவாகக் கொள்கின்றது. ஆண் தேளின் கை, கால், அல்லது வேறு உறுப்புகள்தான் எஞ்சி நிற்கின்றன. மணம்புரிந்த மறு நாட் காலைக்குள் ஆண் தேள் பெண் தேளுக்கு இரையாகின்றது என்பதைப் பேபர் கண்டுபிடித்தார்.

பேபர், வயது முதிர்ந்த காலத்திலும்கூடத் தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திவந்தார். “நமது சொந்த உலகம்”

என்னும் நூலில் மலையும் மலைசார்ந்த காடுகளைப்பற்றியும், அவற்றின் இயற்கை வனப்புகளைப்பற்றியும் எழுதி இருக்கிறார். அவரின் நூல்களில் உலகநீதிகளை எல்லாம் பரக்கக்காணலாம். மனிதர்களைப்போலவே சிற்றுயிர்களும் ஒன்றோடொன்று போர் தொடுப்பதையும் ஒன்றை மற்றொன்று கொடுமைப்படுத்துவதையும் கண்டு இரக்கமுற்றார். ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும் வழக்கம் மாறவேண்டுமென்றும், ஊனைத்தின்று ஊனை வளர்க்கும் பழக்கம் ஒழியவேண்டுமென்றும், எளியாரை வலியார் வாட்டும் தீமை நீங்கவேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தார். இவ் உலகம் இன்ப உலகமாக மாறவேண்டுமெனத் தவங்கிடந்தார். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இருக்க வேண்டுமென்றும், எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றும் பறைசாற்றினார்.

பேபரின் 90 ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதற்சாகப் பிரெஞ்சு மக்கள் அவர் இருந்த இடத்திற்குத் திரள் திரளாக வந்து கூடினர். ஏராளமான வெகுமதிகளைக் கொண்டு வந்து கொடுத்தனர். ஆராய்ச்சிக் கழகத்தினரால் அவருக்கு ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. பேபர், இன்பத்தில் மூழ்கி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

"நான் எப்படி என்பதற்கு மட்டும் தானே விடை கண்டு பிடித்தேன். ஏன் என்பதற்கு இன்னும் விடை தெரியவில்லையே" என்று கூறினார். "நமது சிற்றறிவிற்கு எட்டாத பொருள்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன" என்பதையும் எடுத்துக்காட்டினார்.

"எனது ஆராய்ச்சிகளுக்காக நான் பொருள் ஒன்றும் செலவழிக்கவில்லை. என் காலத்தைத்தான் செலவழித்தேன். எனக்குப் பொருள் தேவை இல்லை. உங்கள் அன்பு இருந்தால் போதும்" எனக் கூறினார்.

இவரது புகழ் நாடெங்கும் பரவியது. 'விக்டர் ஹியூகோ' (Victor Hugo) என்னும் கவிஞர் பேபரைப் "பூச்சிப்புலவர்" எனப் போற்றிப் புகழ்ந்தார். பேபர் தமது ஆயுள் முழுவதும் ஆராய்ச்சியிலேயே கழித்து 1915 ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) *சென்னை நகராண்மைக் கழகத்தார் நாட்டுப்பற்று*

சென்னை நகராண்மைக் கழகத்தினர் 27—7—55 ஆம் நாள் கூடிய கூட்டத்தில் நகராண்மைக் கட்டிடத்தில் தாங்கியிருக்கும் ஆங்கிலேயர்க்குரிய விருதினை உடனடியாக எடுத்துவிட்டு நம் தமிழக மூவேந்தர்களின் கொடிகளான மீன் புலி வில்லுருவம் பொறித்த கொடியை உயர்த்துவதென்று முடிபு செய்துள்ளார்கள்.

குறிப்பு: *இந் நகராண்மைக் கழகத்தாரின் நாட்டுப்பற்றையும் தமிழர் பண்பாட்டின் சிறப்பு, அவர்கள்பால் திகழ்தலையும் அறிந்து மகிழ்கின்றோம்; விரைவில் முடியுடை வேந்தர்களின் நம் தமிழகக் கொடி, நகராண்மைக் கழகக் கட்டிடத்தில் வானளாவ நின்று நிலவுமென எதிர்நோக்குகின்றோம். கொடியில் பொறிக்கப்பெறும் சொற்கள் தமிழ்மொழியிலே பொறிக்கப் பெறுமென நம்புகின்றோம்.*

(உ) *சென்னை நகரம் யாருக்கு உரிமை ?*

சென்னை நகரம் இயற்கைவளம் நிரம்பியது. தமிழகத்தின் பெருமைக்குச் சான்றாகத் திகழ்வது. அதன் உள்ளிடங்கள் தமிழர் தெய்வ உருவநிலையங்களாகத் திகழும் பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்களும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்களும், நீலமேனி நெடியோன் கோயியில்களும், வெற்றிவேற்றடக்கைக் கொற்றவை கோயில்களும் திகழ்வன ஒருபாற் சான்றாக, கடற்கரைப்பட்டினமாதலால், அச்சார்புடைய பெயர்களாக, கோடம்பாக்கம் நுங்கம்பாக்கம் சேப்பாக்கம் மீனம்பாக்கம் போன்ற ஊர்ப்பெயர்களும் அமைந்து தமிழகமாந்தர் இணைப்பெயர்கொண்டு அமைத்த பெயர்களால் வழங்கப்படுவதொன்றே இச் சென்னை தமிழகத்துக்கே உரிய நகரமென்ப தொருதலை. அவ்வாறிருந்தும், மொழிபெயர் நாட்டினர் வருபவர் போபவரெல்லாம் தத்தமக்குரியதென உரிமை கொண்டாட வருவது வருந்தத்தக்கதாவதுடன், அவர்தம் பேராசை வெறிகண்டு பெரிதும் இரங்கத்தக்கதுமாகும்.

அண்மையில் ஆந்திரநாட்டு முதலமைச்சர் திரு. கோபால் ரெட்டியார் இச் சென்னைக்கு வந்தார்; அதுபோது, நம் அமைச்சர்கள் அவர்க்கு விருந்து புறந்தந்தனர். அப்போது பாராட்டுக் கூறினர். அதற்கு மறுமொழி இறுத்த ரெட்டியார், 'சென்னை நகரம் தேசத்தின் பொதுச்செல்வம்; தமிழர் ஆந்திரர் அனைவருக்கும் பொதுவான நகரம்' என்று வாய்வாளாது கூறினர். அண்மையிற் கூடிய நகராண்மைக் கழகக்கூட்டத்தல் இது குறித்துத் தம் மறுப்புக்கூறி கண்டிப்பான தீர்மானம் நிறைவேற்றி, கோபால் ரெட்டியாருக்கு இதை அறிவித்துச சென்னைநகர் தமிழருக்கே உரியதென ஏற்கெனவே முடிவாகி இருப்பதை அறிவிக்கவேண்டுமென அவையாரால் முடிபுறுத்தப் பெற்றது.

குறிப்பு: *சென்னை நகராண்மைக் கழகத்தார் தம் உண்மையை நன்குணர்ந்து நேரிய நிலையில் நின்று கடப்பாட்டுணர்ச்சியுடன் தமிழ் நாட்டுக்கு எழுச்சியூட்டி ஆக்கந்தேடுதலைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.*

(௩) தமிழில் வழிபாட்டுக்கு எதிர்ப்பு

உலகில் தாய்மொழியே அவ்வந்நாட்டாருக்கு உயர்ந்தது, அதற்குக் கேடு சூழ்வோர், தாய்க்கொலை சால்புடைத்தென்னும் அறிஞர் கூட்டத்துள் சேர்ந்தவராவர். ஆகவே, தன்னுரிமை பெற்ற நாட்டில் தாய்மொழியே ஆட்சி மன்றம்முதல் கடைத்தெருவரையில் முதன்மையாக வைத்தற்குரியதாகும்.

இம்முறையைப் பின்பற்றியே, நம் தமிழகத்தில் இந்தியை எதிர்க்கின்றோம். கோயில்களில் நடமாடும் வடமொழி மந்திரத்தையும் வேண்டா என்கின்றோம். இதில் தவறில்லை; இதற்காக ஆண்டவன் பால் தமக்கு நலம் வேண்டித் தமிழிற் கூறிவேண்டினால், மந்திரிகளும் தந்திரிகளும் கூட இதை எதிர்க்கின்றனரென்றால், இன்னும் வடமொழிப்பித்துத் தெளியவில்லை யென்றுதான் கருதுகின்றோம். பலர், நாளிதழ்களில் திங்கள் இதழ்களில் தமிழில் அருச்சனை செய்தால் குடி முழுகிப் போய்விடுமெனப் பிதற்றுகின்றனர். இவர்கட்கெல்லாம், குன்றக்குடி அடிகளார் முன்வந்து தமிழிலேயே வழிபாடு செய்ய வேண்டுமெனக் கட்டளையிடுவதொன்றே சாலும்.

(௪) சென்னை முதன் அமைச்சர் வித்துவானாக இருத்தல்வேண்டும்

கடந்த 16—7—55இல் தமிழ் இலக்கிய மாநாடு சிதம்பரம் இராசா அண்ணாமலை நகரில் அமைந்த கவிமணி பந்தலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தலைமையில் நிகழ்வுற்றது.

அதுகாலைத் தம் தலைமையுரைச் சொற்பொழிவாற்றியபொழுது அவர் குறிப்பிட்டதாவது: பழைய மொழி ஒன்று இருக்கின்றதென்றால் அது தமிழ் மொழியையே குறிக்கும். தமிழ்நாட்டில் தமிழை வளர்ப்பதற்காகவே இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்தார் என்றும், அதில் தமிழ்மொழி இலக்கியத்தை வளர்ப்பதற்காக ஓர் அவை ஏற்படுத்தியிருப்பதாகவும், அதில் இலக்கியத்துக்காகத் தம்மைப் பொறுப்பாளராக அமைத்திருப்பதாகவும் கூறியதோடு, அதனால் தமிழன் பெருமை இலக்கியத்தால் மாண்புறுகின்றதென்று விளக்கிப் பேசினார். ஆகவே, இனி வருங்காலத்தில் யாவரும் தமிழ்ப்புலவர்களாக ஆதல்வேண்டுமெனக் கூறி, இனி வருகின்ற சென்னை மாநில முதலமைச்சர் ஓர் தமிழ்ப்புலவராகத்தான் இருக்கவேண்டுமென்று வற்புறுத்திப் பேசித் தம் தலைமைச் சொற்பொழிவை முற்றுவித்தார்.

குறிப்பு: தலைமை தாங்கிய பேராசிரியரவர்களின் கரைகாணாத் தமிழ்க்காதலைப் பாராட்டுகின்றோம். தமிழ்மொழி ஆட்சிமொழியாக விரும்புகின்றோம். தமிழ்ப்புலவரே நம் தமிழக முதலமைச்சராக அடுத்துவருதல் வேண்டுமென விரும்பும் விருப்பம், இறைவனருளால் விரைவில் நிறைவுபெற விழைகின்றோம்.

மதிப்புரை

(க) கம்பன் யார்?

[எழுதியவர்: உயர்திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் எம். ஏ. எல். டி., எம். ஓ. எல். பி. எச். டி. வெளியிட்டோர்: செல்வி பதிப்பகம், காரைக்குடி. பக்கங்கள் கoஅ. விலை ரூ. 1-8-0]

கம்பன் யார்? என்னும் நூல் நம் தமிழகப் பெருங்கலைஞராகிய கம்பரைக் குறித்துச் சுருங்கிய முறையில் விளக்கிக் கூறுவதாகும். கம்பர் ஓர் சிறந்த கவிஞர்; அவர் நம் தமிழகத்துக்கு உதவிய செல்வம், இராமாயணப் பெருங்காப்பியமென்னும் சிறந்த நூல்.

இராமாயணம், கட்டுக்கதையென்றும், அது கற்றற்குரியதல்ல வென்றும் இக்கால அறிஞர் பலரும் வாது கூறுவர். ஆயினும் அக் கதை பழங்கால முதல் மக்களிடைப் பரவி வேரூன்றிவிட்டது அஃ தெவ்வாறாயினும் ஆகுக. நமக்கு வேண்டுவது அறங்களும், மக்கள் மாண்புகளும், வீரம் காதல் கொடை ஆடவர் பெண்டிர நன்னீர்மை ஆகிய நல்லறங்களே. இவைகளெல்லாம இக்காவியத்தே மண்டிக் கிடப்பதைக கற்றுத் துறைபோயார் அறிவர்.

இவையிற்றைக் கருவிகளாகக்கொண்டு ஆசிரியரவர்கள், கம்ப ராமாயணம் என்பது முதல் காதல் மணம் என்பது ஈறாகப் பன்னிரண்டு தலைப்புகளில் ஆய்ந்து நம் தமிழர் பெருமையை உலகிற்குணர்த்தி யுள்ளார்கள். அவற்றுள், வால்மீகி இராமாயணம். பௌத்த இராமா யணம், சைன இராமாயணம் இவைகளில் காதைத் தலைவனை இராமபிரான் வரலாறுகள், வெவ்வேறு வகையாக ஒவ்வொன்றும் முரணுகக் கூறியிருப்பனவற்றையும் பிறவற்றையும் ஆய்ந்துகூறி, கம்பர், இக்கதைப் போக்கை உட்கொண்டு நம் தமிழ்நாட்டுக்குப் பொருந்தும் ஒழுக்கங்கள் இவை, பொருந்தாதன இவையெனக் கூர்த்தாய்ந்து நம் நாட்டுப் பழக்கவழக்கங்கட்கேற்ப மாற்றஞ் செய்துள்ளனவற்றை இந் நூல் பக்கம் உo முதல் உஎ வரை கூறிவிளக்கியுள்ளனர். பின்னரும் இந்நூலில் கம்பர் காவியத்தில் இடம் பெற்றுள்ள கடவுட் கொள்கை, அரசியல் நுட்பம், காதல், அதன் பகுதியாகிய ஊடல் கூடல் முதலிய வற்றையும் ஆங்காங்கே கம்பரின் பாடல்களைக் கொண்டே விளக்கிச் செல்வது, இன்ப விருந்தாக அமைந்துள்ளது. ஆசிரியரவர்கள், கம்பரைச் சுவைத்து மகிழ்ந் தீட்டிய கம்பன் யார்? என்னும் இந்நூல் காவியச்சுவை காண்பார்க்கும், வரலாற்றுண்மை ஆய்வார்க்கும், மாணவர்கட்கும் கம்பராமாயணக் காப்பியத்தை ஆய்வதற்கு வழி காட்டியாகத் திகழ்கின்றதெனலாம். யாவரும் கற்கவேண்டிய பய னுள்ள நூல்.

ஆனால், பெரும்புலவர்களையோ அறிஞர்களையோ ஒருமைச் சொல்லால் அழைப்பது நாகரிகத்துக்கு ஏற்றதன்று. 'கம்பன் யார்?' என்பதைக் காட்டினும் கம்பர் யார்? என்றிருந்தால் மிகச் சிறப்புக் குரித்தாகும். குறிகுணங் கடந்த இறைவனைமட்டும் எப்பாற் சொல்லா லும் அழைக்கலாம். பிறரைப் பால் திணைவழுவாது கூறலே சால்பு. இக்காலத்தில் இஃதொரு மறுமலர்ச்சியாகக்கொண்டு வள்ளுவன், சம் பந்தன், நாவுக்கரசன் என்றெல்லாம் அறிஞர்கள் சொற்பொழிவுகளில்

கூறக்கேட்கின்றோம். எனவே, இப்பிற்போக்கினின்றும் அறிஞர்களைப் பன்மைச் சொல்லாற் பாராட்டுதலே நன்முறையாகும்.

இந்நூலாசிரியரையோ இன்னோர் போன்ற வேறு ஆசிரியர்களையோ ஒருமைச் சொல்லால் எழுதின், பேசின் பொறுப்பரோ? என்றே கூற விழைகின்றோம்.

(உ) மனங்கவர் மதுரை

[யாத்தோர்: வித்துவான், திரு. தி. கி. சுந்தரமூர்த்தியவர்கள், பக்கங்கள் சுசு. விலை ரூ. 0-8-0. இந்நூல் கிடைக்குமிடம்: தி. கி. சுந்தரமூர்த்தி, தமிழாசிரியர், பசுமலை, மதுரை மாவட்டம்.]

இந்நூல் அகவற்பாக்களானியன்ற செய்யுள் நூல். தோற்றம் என்பது முதல் எழுச்சி என்பது ஈறாக முப்பானிரண்டு தலைப்புக்களில் மதுரைமாநகரின் சிறப்புக் குறித்து விளக்கியுள்ளனர். மதுரை நகர் பண்டைக்கால முதல் இற்றை நாள்வரை வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மாநகர். நம் கன்னித்தமிழ் இந்நகரில் வளர்ந்தே உலகெல்லாம் பரந்தது. இறைவன் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிதற்கும், கண்ணகியார் காற்சிலம்பால் காவியம் பிறத்தற்கும் பத்துப் பாட்டு எட்டுத்தொகை நூல்கள் தோன்றற்கும் காரணமாக இருந்தது இந்நகரே.

இத்தகைய தமிழ் மதுரையைத் தற்காலம் காண்பதற்கு ஏற்றதாக இந்நூலை ஆசிரியர் ஆக்கித் தந்துள்ளனர். இந்நூலைக்கொண்டு இந் நகரைப் பார்க்காதவரும் இந்நகரில் இன்னின்ன, இன்ன இடங்களில் உள்ளன என்பதைக் காண்டற்கு வழித்துணையாக உதவுவது இஃ தெனின் மிகையாகாது. எல்லோருக்கும் நன்கு தெளிவுறும்படி வேற் றுச் சொற்களையும் கலந்து பாக்களில் அமைத்துள்ளனர். ஆயினும் நகரச் சிறப்புத் தெரிதற்குத் தொடர்வண்டி வழிகாட்டி (Railway guide) போல் உதவியாக அமைந்துள்ளது. மேலுறை மீனாட்சியம்மை யார் திருக்கோவில் திருவுரு இலகுகின்றது. நல்ல எளிய சிறிய நூல் இதை யாத்த ஆசிரியர் வாழ்க.

(ங) கூட்டுறவால் நாட்டுயர்வு

[ஆசிரியர்: திரு. ஓ. இரா. கிருட்டினசாமி எம். ஏ. பி. காம், எப். ஆர். ஈ. எஸ். அவர்கள். கிடைக்குமிடம்: மறைமலை இல்லம், 188, திரு. வொற்றியூர் ஐரோடு, சென்னை-21. பக்கம்: சஉ. விலை ரூ. 0 8-0.]

கூட்டுறவால் நாட்டுயர்வு என்னும் இந்நூல் சுருக்கத்தில் பெருக்கமாக மக்கள் பொருள் நிலையில் உயரும் நிலையை எடுத்து விளக்கிக் காட்டும் நூல். ஆசிரியர் வணிக நுண்ணியற் கலையில் கற்றுத் துறைபோயவராகலின், இதில், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது முதலாகக் கடல் கடக்கும் வகை என்பதீறாக ஏழு பகுதிகளாகப் பகுத்துக்கொண்டு உலகியலை ஆய்ந்து, பொருள்நிலையில் மன்பதை யுலகு முன்னேறவேண்டியவற்றிற்கு வழிகோலிக் காட்டுகின்றார். மக்கள் தனித்தனியாகப் பிரிந்துநிற்றல் கூடாதென்றும், கூட்டுறவினா லேயே உலகம் இயங்குகின்றதென்றும், அதற்குக் காட்டாக அணுக் களின் கூட்டுறவு, புள்ளினங்களின் கூட்டுறவு, மற்றைய எல்லா உயிர்க

ளிடையேயும் கூட்டுறவு என்று விளக்கிக் கூறி, மக்கள் கூட்டுறவின் இன்றியமையாத் தன்மையை விளக்கிக் காட்டியுள்ளனர். முதலாளித் தனம், உலகைப் பாழாக்க முறபடும் கம்யூனிசக் கொள்கை முதலிய வற்றின் நிலைகளினால் நலங்கிட்டாதெனக் கூறி நன்கெடுத்து விளக்கி யுள்ளனர்.

இறுதியாக வணிகக் கூட்டுறவு முறையால் நாடு முன்னேறும் எனக்கூறி நூலை முற்றுவிக்கின்றார். நூல் தனித்தமிழ் உரைநடை யில், செவ்விய இனிய செந்தமிழ்ச் சொற்களால் ஆக்கி நாட்டுக்கு உதவி யுள்ளனர். பயனுள்ள நல்ல நூல். யாவரும் கற்று அவ்வழி யொழுகிச் செல்வ நிலையில் எக்கழுத்தங்கொள்ளத் துணையாகிய விழுமிய நூல் எனப் பாராட்டுகின்றோம்.

(௪) தாமரைக் குமரி

[ஆசிரியர் : மு. அண்ணாமலை அவர்கள், அண்ணாமலை நகர் : வெளி யீட்டோர் அன்புப்பண்ணை, சென்னை - 5. பக்கங்கள் 118. இரண்டாம் பதிப்பு, விலை ரூ. 1-8-0.]

தாமரைக் குமரி என்னும் இந்நூல், செய்யுட்களால் இயன்றது. ஆசிரியரவர்கள் இந்நூலை இயற்கை, பிற, காதல், சிறு காவியம் என்னும் நான்கு பகுப்பாகப் பகுத்துக்கொண்டு முப்பத்திரண்டு தலைப் புக்களில் நூலை ஆக்கியுள்ளனர். பாடல்கள் யாவும் எளிமையும் இனிமை யும் கொண்டுள்ளன; இழுமென் ஓசை நயம் வாய்ந்து யாற்றொழுக்குப் போல் செய்யுட்கள் யாவும் தட்டுத் தடையின்றி ஓடுகின்றன; கருத் தாழமிக்கனவாகவும் திகழ்கின்றன.

தாமரைக் குமரி என்னும் இந்நூலின் பெயராக அமைந்த பகுதி மிக்க சுவையான காதற் பகுதியாகும். இதில் கதிரவனும், தாமரை மலராகிய பெண்ணும் உரையாடுவதாக அமைத்திருக்கும் கற்பனைகள் மிக்க இன்சுவை தருவன. மீண்டும் இந்நூலகத்துப் புதுவதாக மலர்ந்த அரிய கருத்து நயங்கள் படித்துப் படித்துச் சுவைத்து மகிழத் தக்கனவாகும்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.